# இஸ்லாமியப் பண்பாடு

(ஒழுக்கம்)




ஆசிரியர் :-

பன்னூலாசிரியர் மௌலானல்ஹாஜ் அல்லாமா

மர்ஹூம்

## S. S. முஹம்மது அப்துல் காதிர்

ஸாகிப் பாக்கவி [ றஹ் ]

உத்தமபாளையம்.

بسم الله الرحمن الرحيم

الحمد لله نحمده ونستعينه ونستغفره ونؤمن به ونتوكل عليه
ونعوذ بالله من شرور انفسنا ومن سيئات أعمالنا من يهده
الله فلا مضل له ومن يضلله فلا هادي له ونشهد ان لا اله
الا الله وحده لا شريك له ونشهد ان سيدنا محمدا عبده ورسوله

சோதரீர் உலகிற்றோன்றிய முதல் மனிதன் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காலம் முதல் இஸ்லாம் உலகில் இருந்து வருகிறது. இன்றைய உலகில் மதம் என்ற பெயரில் இயங்குகிற சகல மார்க்கங்களிலும் தெய்வ விசுவாசத்திலும் முதலாவது மதம் இஸ்லாம்தான். அதனை முதன் முதலாக உலக மக்களுக்கு போதித்த முதலாவது நபி, முதல் மனிதராகிய ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தான். அவர்களுடைய காலத்திற்கு பிறகு தான் பல விதமான கொள்கைகள் மனிதரால் போதிக்கப்பட்டன. இவர்களுடைய இப்போதனைகளின் பயனாக மனித உள்ளங்கள் தெய்வ நியதியை விட்டுவிலகிச் சென்ற போதெல்லாம் நபிமார்கள் மூலமாக சன்மார்க்கம் என்ற இஸ்லாமை இறைவன் அவ்வக் காலத்தில் வாழ்ந்த மக்களின் விவேகத்

திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் தக்கவாறு புதிய முறையில் சன்மார்க்க இஸ்லாமின் கொள்கைகளை இறைவன் உபதேசித்தான். இவர்கள்யாவரினும் கடைசியாகவும் இறுதியாகவும் சன்மார்க்கஇஸ்லாமை உபதேசிக்க நபியாக இறைவனால் நியமிக்கப்பட்டவர் முஹம்மத் (ஸல்) ஆவர். இவர் சற்றைக்கு ஏறக்குறைய 1400 வருஷங்களுக்கு முன்னர் தமது நாற்பதாவது வயதில் சன்மார்க்கப்பிரசாரத்தை திருமக்காவில் ஆரம்பித்து இருபத்து மூன்று வருஷ காலம் உபதேசித்து அறப்நாட்டில்சன்மார்க்கத்தை ஸ்திரம் செய்து. இதுதான் சம்பூரணமான இஸ்லாம் மதம் இது மனிதவர்க்கம் முழுவதற்கும் இறைவனால் அருளப்பெற்ற ஒரே மதம். மற்றவையாவும் இறைவனாலருளப்பட்டவைகளல்ல இதனை மனிதவர்க்கத்தார் வாழுமிடங்களிலெல்லாம் பரவச்செய்து அவர்களிடம் பிரசாரம்செய்யவேண்டும் என்று தங்கள் சிஷ்யர்களிடம் கூறிவிட்டு தங்களது 63-ம் வயதில்திருமதீனாவில் இப்பூதஉடல் வாழ்வை பூர்த்திசெய்து புற உலகை விட்டு மறைந்தார்கள்.

அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அவர்களுடைய சிஷ்யர்களான ஸஹாபிகளும் தாபியின்களும் தபஉ-தாபியீன்களும் இமாம்களும் ஒலிமார்களும் நல்லோர் பெரியோர்களும் வாழையடி வாழையாக இஸ்லாம் மதத்தை உலகில் போதித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய பிரச்சாரத்திலும் இஸ்லாமிய பண்பாடு நற்குண நன்னடத்தைகளால் உலகம் எங்கும் மூலை முடுக்குகளிலெல்லாம் இஸ்லாம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமென பெருகி வளர்ந்து கொண்டிருக்கிறது.

மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட மதங்களும், மதக் கொள்கைகளும், நாளுக்கு நாள் மறைந்து கொண்டும் மாய்ந்து கொண்டும், குறைந்துகொண்டும், குன்றிக்கொண்டும் இருக்கின்றன. மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட மதங்



களைப்பின் பற்றுவோர் அறியாமையாலோ அழுக்காற்றலாலோ அக்கால முதல் இக்காலம்வரையில் சன்மார்க்கத்தை எதிர்த்துக் கொண்டே இருக்கின்றனர். எக்காலத்திலும் அவர்களுடைய எதிர்ப்பு உத்தேச பலனை அளித்ததில்லை வாளாயுதத்தாலும் அரசாங்க அடக்குமுறையாலும். நாவன்மையாலும், பேனாவன்மையாலும். நயவஞ்சகத்தாலும், ஏமாற்றுகளராலும், தேசியராஜ்யக்கொள்கைகளாலும் எண்ணத் தொலையாத தந்திரோபாயங்களாலும் எதிர்ப்புகள் புதுப்புதுமுறையில் செயல்படுத்தப்படுகின்றன.

இவைகளுக்குத்தக்க பிரதியை இத்திரு கூட்டத்தாரும் செய்கின்றனர் இவர்களும்தங்கள்பிரசாரத்தில்சலிப்படையவில்லை. இப்பொழுது கலாசாரம், நாகரீகம், உரிமை என்ற பெயர்களால் எதிர்ப்பிரசாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளை மக்களுக்கு உணர்த்தி சத்திய சன்மார்க்க இஸ்லாமின் பண்பாட்டை புரியச்செய்வது உலக சமாதானம் உலக சுபிட்சம் ஆகியவைகளில் கருத்துள்ள நன்மனம் படைத்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

இஸ்லாம் மதம் மேலே கூறப்பட்டுள்ளபடி ஆதி மனிதரால் தலைநாளில் உபதேசிக்கப்பட்டது. அது குறிப்பிட்டஒரு நாட்டுக்குமட்டிலுமோ ஒரு சமூகத்தாருக்கு மட்டிலுமோஒரு குறிப்பிட்ட பாஷைபேசுவோருக்கு மட்டிலுமோ உபதேசிக்கப்பட்டதல்ல. அதன் கொள்கைகள் உலகம் முழுவதற்கும் பொதுவானவை அதன் வழிபாடுகளனைத்தையும் உலகம் முழுவதற்கும் பொதுவானவை அதன் நடைமுறை யாவராலும் பின்பற்றத்தக்கது இஸ்லாமின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் உலகம் கடைப்பிடிக்கும் பட்சத்தில் உலகில் இனப்பாகுபாட்டையோ வர்ணபேதத்தையோ சமூகஉயர்வுதாழ்வுகளையோ நாம் காணமுடியாது.

உலக சகோதரத்துவம் எங்கும் மிளிரும். மக்கள் மனத்தில் அந்நியோன்யமும் பாச உணர்ச்சியும் நிறைந்து உலக சமாதானமும் சுபிட்சமும் நிலவும்.

இந்நிலை பேராசைக்காரர்களுக்கும் ஆதிக்கப்பிரியர்களுக்கும் விரோதமான தாதலின் இஸ்லாம் மதத்தைக் குறித்து மக்கள் தவறானகருத்துக் கொள்வதற்கும், அதன் மேல் வெறுப்படைவதற்கும் தேவையான சகல முயற்சிகளையும் செய்தனர் இன்றும் செய்து கொண்டிருக்கின்றனர். இதனைக்குறித்து முஸ்லீம் அறிஞர்கள் அறபி, உர்தூ பார்ஸி, ஆங்கிலம், தமிழ் உள்பட ஏராளமானபாஷைகளில் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியிருக்கின்றனர். ஆதலால் அந்த சர்ச்சையை இங்கு விபரிக்காமல் இஸ்லாமிய பண்பாட்டைப் பற்றி மட்டும் இங்கு சுருக்கமாக எழுதுவோம்.

## மனிதனின் முக்கடமை

இவ்வுலகில் மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகளை இஸ்லாம் உணர்த்துகிறது ஒவ்வொரு மனிதனும் தனது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவானாயின் தற்போது இவ்வுலகில் தோன்றியுள்ள தொழிலாளி, ஏழைபணக்காரன் என்பன போன்றவர்க்கப் போராட்டங்கள் தோன்றுவதற்கு இடமேற்பட்டிருக்காது.

திருமக்காவைத்துறந்துதிருமதீனாவில் நபிகள்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்குடியேறியதைத் தொடர்ந்துதிருமக்காவிலிருந்தும் பிறவிடங்களிலுமிருந்தும் நூற்றுக்கணக்கான முஸ்லீம்ஸ்திரீபுருஷர்கள் தங்கள் வீடு வாசல்களையும் சொத்து சுதந்திரங்களையும் துறந்து திருமதீனாவிற் குடியேறினர். திருமதீனாவில் அக்காலத்தில்



முஸ்லிம்அரசாங்கம் அமைக்கப்படவில்லை. இந்நிலையில் அகதிப்பிரச்சினை எழுந்துவிட்டது. இதனைத்தீர்த்துவைப்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அகதிகளுக்கும் மதீனா வாழ்முஸ்லிம்களுக்குமிடையில் சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தினார்கள். அன்ஸார்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு அகதிச் சகோதரர் அக்குடும்பத்தின் பராமரிப்புக்கும் உறவுக்கும் பாதுகாப்புக்கும் ஆதரவுக்கும் உரியவரானார் அபூதர்தாஉ (ரலி) என்னும் மதீனாவாசிக்குசல்மான் பாரிஸிறலியல்லாஹு என்னும் அகதி சகோதரரானார்.

ஒருநாள் சல்மான் பாரிஸி (றலி) என்ற அகதி அபூதர்தாஉ (றலி) என்ற அன்ஸாரி வீட்டிற்குச் சென்றார். அச்சமயத்தில் அபூதர்தாஉ (றலி) என்ற அன்ஸாரி வீட்டில் இல்லை. அவருடைய வாழ்க்கைத் துணை நல்லாள் உம்முதர்தாஉ (றலி) வீட்டிலிருந்தார். அக்காலத்தில் ஹிஜாபு (பர்தா) சம்பந்தமான கட்டளை இறைவனால் அருளப்படவில்லை. ஆதலால் உம்முதர்தாஉ (றலி) ஸல்மானுல் பாரிஸீ (றலீ) அவர்களுக்கு வெட்கவில்லை. ஸ்திரீ தனிமையில் இருக்கையில் அவளிடம் அந்நிய ஆடவர் பேசுவதும் செல்வதும் என்ற நியதி கடைப்பிடிக்கப்படாத காலமாதலால், அவரை நோக்கி ''என்ன உம்முதர்தாஉ? உனக்கு உடல் நலமில்லையா? உடைகள் ஏன் இப்படி அழுக்காக இருக்கின்றன? தலையை ஏன் வாரிக்கொள்ளவில்லை? என்றெல்லாம் சல்மானுல் பார்ஸி (ரலி) அனுதாபமாக விசாரணை புரிந்தார் அதற்கு, அவ்வம்மையார் ''உங்கள் சகோதரருக்கு உலகம் தேவை இல்லை. ஆதலால், நான் இப்படித்தானே இருக்க வேண்டும் என விடையளித்து விட்டு, அவரை வீட்டில் அமரச் செய்தார். ஸல்மானுல் பாரிஸி (ரலி) வீட்டிற்கு வந்த விபரத்தை தன் கணவர் அபூதர்தாஉ (ரலி) அவர்களுக்கு தெரிவிக்க ஏற்பாடு செய்து விட்டு, அவருக்காக உணவு தயார் செய்து கொண்டிருந்தார்.

தமது இல்லத்திற்கு தமது இஸ்லாமியச் சகோதரரான அகதி ஸல்மான் பாரிஸி (ரலி) வந்திருக்கிற தகவலை அறிந்த அபூதர்தாஉ (ரலி) அன்சாரி மஸ்ஜிதிலிருந்து வீட்டிற்கு வந்தார், இருவரும் ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லி முகமன் கூறிய பிறகு மிகவும் அந்நியோன்யமாக அளவளாவி உரையாடிக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் உணவு தயாராகி விட்டது. இருவரும் அருந்துவதற்காக உம்முதர்தாஉ (ரலி) உணவைப் பரிமாறினர்.

சகோதரரே ''நீர் உணவருந்துவீராக; நான் இன்று நோன்பு நோற்றிருக்கிறேன்'' என்றார் அதற்கு சல்மானுல்-பாரிஸி (ரலி) ''நீரும் என்னுடன் சேர்ந்து உணவருந்த வேண்டும். வீட்டுக்காரர் விருந்தாளியுடன் சேர்ந்து உணவருந்துவதுதான் பண்பாடு அவ்வாறின்றி விருந்தாளியை மட்டும் தனிமையில் அமர்ந்து உணவருந்தச் செய்வது பிச்சையிடும் அன்னமல்லவா? விருந்தோம்பல் அல்லவே என்றார்.

நீர் கூறுவது உண்மைதான். நான் நோன்பாளியராதலால் உம்முடன் சேர்ந்து உணவருந்த முடியாத நிலையிலிருக்கிறேன் என்றார் அபூதர்தாஉ (ரலி) அவர்கள்.

அதற்கவர் ''நீர் பர்லான நோன்பையா நோற்றிருக்கிறீர், இது ரமலான் மாதமல்லவே'' என்றார்.

அபூதர்தாஉ (ரலி) இது ரமலான் மாதமுமல்ல. நான் நோற்றிருப்பது பர்லான நோன்பும் அல்ல. நபில் நோன்பு தான் என்றார்.

ஸல்மானுல் பாரிஸி அவ்வாறாயின் விருந்தாளியை உபசரிப்பதற்காக நபில் நோன்பை முறித்து விடலாம். நீர் நோன்பைமுறித்து என்னுடன் சேர்ந்து உணவருந்தாத வரையில் நான் இவ்வுணவை உட்கொள்ளுவதாக இல்லை என்றார்.



அபூதர்தாஉ (ரலி) அவர்கள் வேறு பதில் கூறமுடியாமல் நோன்பை முறித்து தமது இஸ்லாமியச் சகோதரர் ஸல்மானுல் பாரிஸி (ரலி) அவர்களுடன் சேர்ந்து உணவருந்தினார். பிறகு இருவரும் சேர்ந்து தொழப் போனார்கள் மறுபடியும் பேசினார்கள். தொழுகை நேரம் வந்த போது தொழுது கொண்டனர். இருவரும் அங்கேயே படுத்துக் கொண்டனர். தம்முடைய அகதிச் சகோதரர் நித்திரை செய்கிறார் என நினைத்து அன்சாரிச் சகோதரர் மஸ்ஜிதுக்குச் சென்று வணக்கம் புரிய படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்தார். உடனே, அகதிச்சகோதரர் எங்கு செல்கிறீர் பேசாமல் படுத்து நித்திரை செய்யும். தொழுவதற்கு இன்னும் நேரம் இருக்கிறது என்று கூறினார் அன்சாரிச் சகோதரர் படுத்துக்கொண்டார்.

சற்று நேரம் கழிந்தது. அகதிச்சகோதரர் நன்கு அயர்ந்து தூங்குவதாக அன்ஸாரிச்சகோதரர் எண்ணிக் கொண்டு மஸ்ஜிதுக்குச் செல்ல சப்தமின்றி எழுந்தார். எங்கு செல்கிறீர் பேசாமல் தூங்குவீர் தொழுவதற்கு இன்னமும் நேரமிருக்கிறது என்றார் அகதிச்சகோதரர் இவ்வாறாக நான்கைந்து முறை அன்சாரிச் சகோதரர் எழுவதும். அகதிச் சகோதரர் படுக்க வைப்பதுமாக இருந்தனர், இருவரும் அவ்விரவு முழுவதும் தூங்கவில்லை எனலாம் இறுதியாக தஹஜ்ஜத் தொழுவதற்கான நேரம் வந்தது இப்பொழுது எழுந்திரும். மஸ்ஜிதுக்குச் செல்லலாம் என்று கூறி வலி ரப்பிக் ஹக்குன் வலிநப்ஃஸிக ஹக்குன் வலிஅஹ்லிக ஹக்குன் (உனது இறைவனுக்கும் பாத்தியதையுள்ளது. உனது ஆன்மாவுக்கும் பாத்தியதையுள்ளது. உனது வீட்டாருக்கும் பாத்தியதையுள்ளது) என்று உபதேசித்தார், அகதிச் சகோதரர். இருவரும் சேர்ந்து மஸ்ஜிதுக்குச் சென்றனர், தொழுதனர். இதர வணக்கங்களிலும் ஈடுபட்டனர்.

சுப்ஹுக்கு நேரமாயிற்று, பிலால் (ரலி) பாங்கு சொன்னார். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இமாமாகவும், மற்றவர்கள் முக்ததி-களாகவும் இருந்து பஜ்ருடைய பர்ளை தொழுதார்கள். அகதிச் சகோதரர் முந்தைய நாளில் தம்முடைய நோன்பை முறிக்கச் செய்ததும் இரவில் விடியும் வரையில் தொழ விடாமல் படுக்க வைத்ததும் அன்சாரிச் சகோதரருக்கு மிகவும் கவலையாயிருந்தது. அகதிச் சகோதரர் முதியவர், அறிவாளி. எனவே வருத்தத்துடன் அவருடைய கட்டளைக்-குப் பணிந்தார் ஆயினும் தமது ஆற்ருமையை பெருமா-னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறி-யேனும் தீர்த்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில் நடந்த விபரமனைத்தையும் விடாமல் கூறி, இறுதியாக ஸல்மான் தமக்கு உபதேசித்ததையும் கூறினார். அவர் கூறியதை பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டுவிட்டு ஸதக ஸல்மான் (சல்மான் உண்மை-யுரைத்தார்) என்று கூறினார்கள்.

ஹலரத் ஸல்மானுல் பாரிஸி (ரலி) அவர்கள் கூறிய ''வலிரப்பிக்க ஹக்குன், வலி நப்ஸிக்க ஹக்குன் வலி அஹ்லிக ஹக்குன்'' உபதேசத்தில் முப்பெருங்கடமைகள் உணர்த்தப்படுகின்றன. முதலாவது:- உம்மைப்படைத்து இரட்சித்துக் காப்பாற்றுகிற றப்பாகிய அல்லாஹுத்த ஆலாவிற்கு நீர் ஆற்ற வேண்டிய கடமை. இரண்டாவது:- உமது உடல், உயிருக்கு செய்ய வேண்டிய கடமை. மூன்றாவது:- நீர் இவ்வுலகில் வாழ்வதற்கும், பலுகிப் பெருகுவதற்கும் தேவையான உமது குடும்பத்தினருக்கு நீர்



செய்ய வேண்டிய கடமை. இக்கடமைகளை நேர்மையான முறையில் நிறைவேற்றுவதற்குத்தான் ஷரீஅத் (மார்க்கம்) என்று பெயர். இதனை திருக்குர்ஆனும், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முன்மாதிரியாக இருந்து செய்து காட்டியவைகளும், விளக்கிக் கூறியவை-களும் (சுன்னத்) மனிதர்களுக்கு உணர்த்துகின்றன. உங்களிடம் இரண்டை விட்டுச்செல்கிறேன். அவைகளை நீங்கள் பலமாகப்பிடித்துக்கொண்டிருக்கும்வரையில் நீங்கள் வழி தவறிவிடமாட்டீர்கள். அவை திருக்குர்ஆன் சுன்னத் (எனது வழி முறை) ஆகும் என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். இவை யாவையும் முழுமையாக தெரிந்து கொள்ளவேண்டுமாயின் திருக்குர்ஆன், ஷரீஅத், அகாயித் (கொள்கை) பிக்ஹு (இஸ்லாமியச்சட்டங்கள்) ஸீரத் (சரித்திரம்) ஆகியவைகளை நன்கு புரிந்து கொள்ளவேண்டும் இவை யாவற்றையும் விபரிக்க இச்சிறு நூல் இடந்தராது. ஆதலால் முக்கியமான சில கடமைகளை மட்டும் சுருக்கமாகக் கூறுவோம்.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். வல் அஸ்ரி இன்னல் இன்ஸான லபீ ஹுஸ்ர் இல்லல்லதீன ஆமனூ வ அமிலுஸ்-ஸாலிஹாதி வதவாஸவ் பில்ஹக்கி வதவாஸவ் பிஸ்ஸபுர். காலத்தின் மீது பிரமாணமாக நிச்சயமாக மனிதன் நஷ்டத்-திலிருக்கிறான். விசுவாசங்கொண்டு நற்கிரியைகளைப்-புரிந்து, ஒருவருக்கொருவர் சத்தியத்தை உபதேசித்து, ஒருவக்கொருவர் பொறுமையைக் குறித்து உபதோசித்-தோரைத் தவிர்த்து என்பதாக திருக்குர்ஆனில் சூரத்துல் அஸ்ர் என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இதில் தெய்வ விசுவாசம். நன்னடத்தை, ஒருவருக்-கொருவர் சத்தியத்தை உபதேசித்தல் பொறுமையைக்

குறித்துஉபதேசித்தல் கூறப்பட்டிருக்கிறது. இந் நான்கு விஷயங்கள் எவரிடமில்லையோ அவர் இவ்வுலகில் தோல்வியுறுவார் எந்த நாட்டில் இந்நான்குமில்லையோ அந்த நாடும் தோல்வியுறும். இங்கு இறைவன் குறிப்பிடுகிற வெற்றி, தோல்வி, இலாப, நஷ்டம் என்பது செல்வத்தை மட்டிலுமோ, கல்வியை மட்டிலுமோ குறிப்பிடாது மனித வாழ்வைக் குறிப்பிடுகிறது.

இவ்வுலக வாழ்வு மட்டிலும் மனிதவாழ்வல்ல. இவ்வுலகில்மட்டுமின்றி மறு உலகிலும்வாழவேண்டும். மறுஉலக வாழ்வுக்குத் தேவையானவைகளை இவ்வுலகில் தேடிக் கொள்ளவேண்டும். இவ்வுலகவாழ்வில்தேடிக்கொள்ளவேண் டியதைத் தேடிக் கொள்ளத் தவறினல் மறுஉலகவாழ்வு சோபிக்காது அங்கு நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியது தான். அங்குநஷ்டமடையாமல் வெற்றிபெற வேண்டுமாயின் இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட நான்கு அம்சங்கள், தன்மைகள் இவ்வுலகிலேயே நம்மில் அமையவேண்டும்

பொதுப்பட கவனிக்கில் முஸ்லிம் என்று கூறிக்கொள் கிறவர்களில் முதல் அம்சமாகிய ஈமான் பரிபூரணமாக இல்லாவிடினும் ஓரளவேனும் இருக்கிறது இரண்டாவது அம்சமாகிய நற்கிரியைகளைச் செய்தல் என்பது மிகக்குறைவு. மூன்ருவது அம்சமாகிய சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசித்தல் என்பதும் அறவே இல்லை என்றே கூறலாம். இவை இரண்டும் இல்லாதொழிந்ததால் முந்தைய இரு அம்சங்களும் குறைந்து விட்டன குறைந்து கொண்டே இருக்கின்றன.

## நல்லதை ஏவி தீயதை விலக்கு.

''வல்தகும் மின் கும் உம்மத்துன் ஏத்ஊன இலல்கைரி வஏஃமருன பில்மஃரூபிவஏன்ஹவ்ன அனில் முன்கரி வஉலாயிகஹுமுல்முப்லிஹூன்.



நல்லதின்பால் அழைப்பதும், நற்காரியத்தைக்குறித்து ஏவுவதும் அருவருக்கப்பட்டதை விட்டுவிலக்குவதும் உள்ள ஒரு கூட்டம் உங்களில் இருக்கவேண்டும். அவர்கள்தாம் வெற்றியாளர்கள்என்று அல்லாஹுத்தஆலாதிருமறையில் கூறியுள்ளான். இவ்வாலோசனைக்கேற்ப எக்காலத்திற்கும் நம்மில் ஒரு கூட்டம் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

குன்தும் கைர உம்மத்தின் உக்ரிஜத் லின்னஸி தஃமுருன பில்மஃரூப் வதன்ஹவ்ன அனில்முன்கரி வதுஃமினூன பில்லாஹி

மனிதர்களின் நன்மைக்காக தோற்றுவிக்கப்பட்ட நல்லவர்க்கத்தாராக நீங்கள் இருக்கிறீர்கள் நல்லதைச்செய்யுமாறு ஏவுகிறீர்கள். அருவருப்பானதை விட்டு விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹுத்தஆலாவை விசுவாசிக்கிறீர்கள் என்று நம்மைக்குறித்து இறைவன் கூறியுள்ளான்

நமது பெரியார்களான கண்ணியம் பொருந்திய சஹாபா பெருமக்களும், தாபியீன்களும், தபஉ தாபியீன்களும், இமாம்களும் மற்றுமுள்ள நல்லோர்களும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட நல்ல காரியங்களைச் செய்யும்படியும், தீயகாரியங்களைச் செய்யாதிருக்கும்படியும் தங்கள் மனைவி, மக்களுக்கும், உறவினர்களுக்கும் உபதேசித்தனர் அவர்களை நல்லோர்களாக வாழச்செய்தனர். இதன் பலனாக அவர்கள் காலத்தில் இஸ்லாமிய உலகம் சுபிட்சமாக இருந்தது. செல்வம் கொழித்தது மக்கள் மனம் தூய்மையடைந்தது. நல்ல பலகாரியங்கள் நிகழ்ந்தன முஸ்லிம் அல்லாதார் முஸ்லிம்களை மதித்தனர். கண்ணியப்படுத்தினர் தங்களது வழிகாட்டிகளாக அவர்களை ஏற்றுக்கொண்டனர்.

முன்னோர்களாகிய அப்பெரியார்களிடமிருந்த இந்த நல்ல தன்மை காலப்போக்கில் நம்மிடம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்தது. நம்மிலிருந்த செழிப்பும், மனத்தூய்மையும் செல்வாக்கும், கண்ணியமும் கொஞ்சங்கொஞ்சமாக குறைந்து விட்டன இப்பொழுது நாம் உலக மக்கள் தொகையில் மூன்றிலொரு பாகத்தினராகவும், ஏறக்குறைய நாற்பது நாடுகளின் அரசாங்க நிர்வாகப் பொறுப்புள்ளவர்களாகவும் இருந்தும், மற்றவர்களால் அற்பமாகக் கருதப்படுகிறோம். நல்லதை ஏவி தீயதைத்தடுக்கும் கூட்டம் நம்மில் இல்லாமலாகி விட்டதால் நம்மில் மிக மிகக்குறைந்து விட்டதால் நம்மவரில் இருந்த நற்குண நல்லொழுக்கங்கள் குன்றி துற்தனது ற்நடத்தைகள்மேலோங்கிவிட்டன அல்லாஹுத்தஆலாவின் அருள் மாறி நம்மைவிட்டகன்றுவிட்டது நாம் இழந்துவிட்ட நமது கண்ணியம் செல்வாக்கு சுபிட்சம் தூய மனம் நம்மில் பூக்க வேண்டுமாயின் புனிதவான்களைக் கொண்ட அத்திருக்கூட்டத்தை நாம் மீண்டும் தயார் செய்ய வேண்டும்.

இத்திருக்கூட்டத்தை தோற்றுவிக்க நாம் ஆள் பிடிக்க வேண்டியதில்லை. நமது மனைவி மக்களுக்கும், உறவினர்களுக்கும் நாம் நல்லுபதேசங்களைச் செய்து அவர்களைத் திருத்த முயல்வது ஒன்றேபோதுமானது இதனைக்குறித்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மன் ரஆ மின்கும் முன்கரன் பல்யுகய்யிருஹு பிஏதிஹி பஇன்லம் ஏஸ்ததீஉ பபிலிஸானிஹி பஇன்லம் ஏஸ்ததீஉ பபிகல்பிஹி தாலித அழ் அபுல் ஈமான் அருவருப்பான காரியம் நிகழ்வதை உங்களில் எவரேனும் கண்டால் தமது கரத்தால் அதற்கு சக்தி இல்லாவிடில் தமது நாவால் அதற்கும் இயலாவிடில் தமது உள்ளத்தால் அதனைத்திருத்த வேண்டும். இது பலஹீனமான ஈமான் என்று உபதேசித்துள்ளார்கள்



தம்முடைய ஆதரவில், கட்டுப்பாட்டில் இருக்கிறமனைவி, மக்கள், தீய காரியம் செய்வதைப்பார்த்தால் அவர்களைக்கண்டிக்கவும், அவசியமேற்பட்டால் தண்டிக்கவும் இயலும்.

உறவினர்கள், தீய காரியங்கள் செய்வதைப்பார்த்தால் தண்டிக்க இயலாவிடினும், அவர்கள் செய்கைகளை கண்டனம் செய்ய முடியும். அதற்கியலாவிடில் உபதேசத்தால் திருத்தலாம். அதற்கும் இயலாவிடில் அவர்களை பகிஷ்கரிக்கலாம், மனத்தால் வெறுக்கலாம். இக்காரியங்கள் யாவருக்கும் ஒன்று போலில்லை. சக்தியுள்ள ஒருவர் தம்முடைய பராமரிப்பின் கீழுள்ள மனைவி, மக்களைத்திருத்தாமல் மனத்தினுள் மட்டும் வெறுப்புற்று, அவர்கள் இஷ்டம் போல் அவர்களை விட்டு வைப்பது ஈமானின் அடையாளமல்ல. சக்தியுள்ளவர்கள் செல்வாக்குள்ளவர்கள் தங்களின் சக்தியையும், செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டும். இவைகளுக்கியலாதவர்கள் இயன்ற வரையில் அவர்களை ஒதுக்கி வைக்கவேண்டும். அதற்கும் இயலாதவர்கள் தாங்களாவது ஒதுங்கி விட வேண்டும். இதற்கும் இயலாவிடில் மனத்தால் வெறுக்க வேண்டும்.

வாரத்தில் ஒரு நாள் சனிக்கிழமையை ஓய்வு நாளாக ஆக்கிக்கொள்ளுமாறு ஹலரத் தாவூத் (அலை) அவர்களின் காலத்திலிருந்த யூதர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான் அவர் நபியாக இருந்ததுடன் அரசராகவும் இருந்ததால் இக்கட்டளை நாடெங்கும் அறிவிக்கப்பட்டு அமலுக்கு வந்தது. ஈலா என்ற ஊர் அக்காலத்தில் துறைமுக நகரம். அங்கு வாழ்ந்தவர்களில் பெரும்பாலோர் மீனவர்கள் மீன் பிடித்து விற்பனை செய்வதை தொழிலாகக்கொண்டவர்கள் அரசு உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து சனிக்கிழமையை ஓய்வு நாளாக்கிக் கொண்டனர். அன்றைய தினம் யாரும் தொழிலில் ஈடுபடக்கூடாது. இறை வணக்கத்தில் ஈடுபடவேண்டும்.

இக்கட்டளை சிலகாலம் பூரண அமலில் இருந்தது, பின்னர் அம்மீனவர்களில் சிலர் இக்கட்டளையை மீறி மீன் பிடிக்கத் துணிந்தனர். இவர்களின் இச்செயலை மீனவர்களிலுள்ள மற்றவர்கள் கண்டித்தனர். இறைகட்டளையை மீறலாகாது என்று உபதேசித்தனர். இவ்வாறு கடலில் சென்று மீன் பிடிப்பது நின்றதாயினும் சிலரின் மனம் ஒப்பவில்லை. கரையினுள் குளங்களை வெட்டி கடல்நீர் அக்குளங்களுக்கு தண்ணீர் வர வாய்க்கால் வெட்டி சனிக்கிழமையன்று கடல்நீரை வாய்க்கால் வழியாக குளத்திற்கு வரச்செய்வதும், குளம் நிறைந்தவுடன் வாய்க்காலின் முகத்துவாரத்தை அடைத்து வைத்திருந்து மறுநாளில் குளத்திற்கு வந்த கடல் மீன்களைப் பிடித்துக்கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தினர்.

இறைகட்டளையை மனப்பூர்வமாக ஏற்று செயல்பட வேண்டும் அதில் தந்திரம் செய்து மறைமுகமாக சட்டத்தை மீறலாகாது என்று சிலர் கூறி இவ்வழக்கத்தையும் கண்டித்தனர். இதனை அம்மீனவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதனால் மீனவர்களில் பிளவு உண்டாயிற்று. இறைகட்டளையை மீற வேண்டாம் என்று கூறினோம். அவர்கள் கட்டுப்படவில்லை அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டாம் அவர்கள் நோக்கப்படி செய்யட்டும். நாமும் அவ்வாறு செய்யாமல் ஓய்வு நாளை சட்டப்படி செயல்படுத்துவோம் என்று சிலர் கூறினர். மற்றவர்கள் இதனை ஒப்பவில்லை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இறைகட்டளையை மீறலாகாது என்றனர். ஆகவே, மீனவர்கள் மொத்தத்தில் மூன்று பிரிவுகளாகிவிட்டனர். குறுக்கு வழியில் மீன்பிடித்து இறைகட்டளையை மீறியவர்கள் ஒரு பிரிவினர். நல்ல வார்த்தையால் சொல்லியும் அவர்கள் கேட்காமல் மீறி குறுக்குவழியில் மீன்பிடிக்கின்றனர், அவர்களைத் தடுக்க



வேண்டாம். நாமும் அவர்களைப் போல் செய்யாமல் மனப்பூர்வமாக இறைகட்டளையை செயல்படுத்துவோம் என்று கூறுபவர்கள் மற்றொரு பிரிவினர். மறைமுகமாக இறைகட்டளையை மீற அவர்களை அனுமதிக்கலாகாது என்று கூறுபவர்கள் மூன்றாவது பிரிவினர். இச்சர்சை முற்றி மூன்றாவது பிரிவினர் மற்ற இரு பிரிவினரையும் ஒதுக்கி விட்டு அவர்களின் இருப்பிடத்தைவிட்டு வெளியேறி வேறு இடத்தில் குடியேறினர். மற்ற இரு பிரிவினரும் ஒரே இடத்தில் வாழ்ந்தனர்.

மறைமுகமாக மீன் பிடிக்கும் தகவல் ஹலரத் தாவூத் (அலை) அவர்களுக்கு தெரிந்தது. அரசாங்கச் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கு இடமில்லாத முறையில் குறுக்கு வழியைக் கடைப்பிடிப்பதைக் குறித்து மனம் வருந்தி இறைவனிடம் முறையிட்டார்கள். இறைவனின் வேதனை வந்தது. இறைகட்டளையை மீறியவர்கள் பன்றிகளாக உருமாறினர். இறைகட்டளையை மீறாமலும், மீறுபவர்களைக்கண்டிக்காமலும் தங்களைப் பற்றி மட்டும் கவனித்துக்கொண்டு அவர்களுடன்சேர்ந்து வாழ்ந்தவர்கள் குரங்குகளாக உருமாறினர். இவ்விரு பிரிவினரையும் ஒதுக்கிவிட்டு வேறுஇடத்திற்கு சென்று வாழ்ந்தவர்களுக்கு இவ்வேதனை இல்லை. அவர்கள் நலமாக வாழ்ந்தனர். உருமாறிய இருகட்சினரும் மூன்று நாட்கள் வாழ்ந்துவிட்டு பின்னர் அனைவரும் மடிந்தனர்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளும் படிப்பினை என்னவெனில் தீய செயலகளைத் தடுக்க வேண்டும் தீய செயல்களைச் செய்பவர்களை ஒடுக்காமல் அவர்களுடன் சேர்ந்தால் தீயவர்களுக்குவருகிற இறைவேதனையிலிருந்து தப்பமுடியாது என்பதே.

ஒரு ஊரிலுள்ள சில தீயவர்கள் கொலை, கொள்ளை முதலியவைகளில் ஈடுபட்டால் அவர்களைப் பிடித்து அரசிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறின்றி

அமைதியாக இருந்து தகவல் சொல்லாமல் இருந்தாலும், அவர்களுக்கு புகலிடம் கொடுத்தாலும் அரசின் கெடுபிடி வரும்போது அவர்கள் எல்லோருக்கும் பொதுவாகவே வரும். சில தீயவர்களின் செயல்களுக்காக மற்றவர்களும் சிரமப்படநேரிடும். இவ்வாறே, குடும்பத்திலுள்ள ஒருவர் தவறு செய்யும் பட்சத்தில் அக் குடும்பத்திலுள்ள மற்றவர்கள் அவரைத்திருத்தாவிடில் அனைவருமே அவதியுறுவர். ஆகவே நற்செயல்களைச் செய்வதற்கும், தீய செயல்களை செய்ய வேண்டாமெனத் தடுப்பதற்கும் அரசு ஆட்களை நியமிக்க வேண்டும் என்றும், ஊரிலுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து செய்யவேண்டும் என்றும் காத்திருக்காமல் ஒவ்வொரு குடும்பத்தலைவரும், தம்முடைய பராமரிப்பிலுள்ளவர்களைக் கவனித்தால் தானாகவே ஊர் முழுவதும் நாடுமுழுவதும் திருந்திவிடும். இந்நல்ல பழக்கம் முஸ்லிம்களிடம் வெகுவாகக் குறைந்துவிட்டது. இதில் அவர்கள் கவனம் செலுத்துவார்களாக.

## பெற்றோரைப் பேண்.

வகழா ரப்புக அன் லா தஃபுதூ இல்லா இய்யாஹு வபில்வாலிதைனி இன்ஹ்ஸானன். இம்மா யுபலில்ஹ்ன இன்தகல் கிப்ரிஇஹ்தாஹுமா அவ் கிலாஹுமா மா பலா தகுல் லஹுமா உப்பின் வலா தன்ஹர்ஹுமா வகுல் லஹுமா கவ்லன் கரீமா வஃபிழ் லஹுமா ஜுனாஹத்தில்லி மினர் ரஹ்மதி வகுல் ரப்பிர்ஹம்ஹுமா கமா ரப்பயானீ ஸகீரா.

உமது ரப்பு தீர்ப்புச் செய்கிறான். அவனையன்றி (வேறுயாரையும்) நீங்கள் வணங்கலாகாது. பெற்றோர்களிருவருக்கும் உபகாரம் செய்யவேண்டும். அவர்களில்



ஒருவரோ, இருவருமோ முதுமையை அடைந்து உம்மிடத்தில் இருந்து கொண்டிருந்தால் அவர்களை நீ ச்சீ என்று (கூட) கூறாதீர்கள். அவர்களைவிரட்டாதீர்கள் அவர்களிடம் மிருதுவான வார்த்தைகளைக் கூறுங்கள். கருணையுடன் அவர்களுக்குப் பணியுங்கள். என்னை கர்ப்பத்தில் அவர்கள் வளர்த்தது போல, எனது ரப்பே அவர்களுக்கு நீ கிருபை செய்வாயாக என்று கூறுவீராக. (திருக்குர் ஆன்)

வ வஷ்ஷைனல் இன்ஸான பிவாலிதைஹி ஹமலத்ஹு உம்முஹு வஹ்னன் அலா வஹ்னின் வபஷாலிஹி பீ ஆமைனி அன் அஷ்குரலீ வலிவாலிதைக இலய்யல் மஸீர்.

மனிதனுக்கு- அவனுடைய இரு பெற்றோர்களைக் குறித்து-அவனுடைய தாய் அவனைக் கஷ்டத்திற்கு மேல் கஷ்டத்துடன் (கர்ப்பத்தில்) சுமந்தாள்-அவனுடைய பால் குடி மறக்கும் காலம் இரண்டு ஆண்டில்-எனக்கும் உன்னுடைய இரு பெற்றோர்களுக்கும் நன்றி செலுத்துங்கள் என்று நாம் வஸிய்யத்துச் செய்திருக்கிறோம் என்னிடமே மீளுதல் இருக்கிறது. (திருக்குர்ஆன்)

வகால அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (ரலி) ஸஅல்து ரஸுலல்லாஹி ஸல்அம் அய்யுல் அமலு அஹப்பு இலல்லாஹி பகால அஸ்ஸலாத் அலா வக்திஹா தும்ம அய்யுன் கால பிர்ருல்வாலிதைனி குல்து தும்ம அய்யுன் அல்ஜிஹாத் பீ ஸபீலில்லாஹ்.

நற்செயல்களில் எது இறைவனுக்குப் பிரியமானது என்று நபி (ஸல்) அவர்களிடம் வினவினேன். தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது என்றார்கள். பின்பு எது என வினவினேன். பெற்றோருக்கு நன்றி செய்தல் என்றார்கள். பின்பு எது என வினவினேன். இறைவனின் பாதையில் முயலுதல் என்றார்கள்.

வகால அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்ரிழல் லாஹி பீ ரிழல் வாலிதைனி வஸக்துஹு பீ ஸக்தில் வாலிதைனி.

இறைவனின் திருப்தி, பெற்றோர் இருவரின் திருப்தியில் இருக்கிறது. அவனது கோபம், பெற்றோரிருவரின் கோபத்திலிருக்கிறது என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வகால அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் தலாதுன் லா என்பஉ மஅஹுன்ன அமலுன் அல்இஷ்ராகு பில்லாஹி வஉகூகுல் வாலிதைனி அல்பிராரு எவ்மிஜ்ஜஹ்ப்.

மூன்று பாபமான செயல்கள். அவைகளுடன் எந்த நற்செயலும் பயனளிக்காது. இறைவனுக்கு இணை வைத்தல் பெற்றோர் இருவரையும் புண்படுத்தல், போர்நிகழும் தினத்தில் பின் வாங்கி ஓடல் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்.

வகால அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அக்பருல் கபாயிரு தலாதுன் அல்இஷ்ராகு பில்லாஹி வஉகூகுல்வாலிதைனி வஷஹாதத்துஜ்ஜுர்



பெரும் பாபங்களில் மிகப்பெரியவை மூன்று இறைவனுக்கு இணைவைத்தல், பெற்றோரை புண்படுத்தல், பொய் சாட்சியம் கூறல் ஆகியவை என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

வ கால ஸல்-அம் ரகம அன்ஃபுன் மன் அத்ரக அபவைஹி இன்தல் கிப்ரி இஹ்தாஹுமா அவ் கிலாஹுமா பலம்எத்குலாஹுல் ஜன்னத அய் பலம் எபிர்ஹருமா பிர்ரன் எகூனு ஸபபன் பீ துகூலில் ஜன்னத்

தன்னுடைய பெற்றோர்களை (அவர்களில் ஒருவரையோ, இருவரையுமோ வயோதிகத்தில்) அடைந்து அவர்களை அவ்விருவரும் அவரை சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யவில்லையெனில் அவருடைய மூக்கு அறுபடட்டும். அதாவது சுவர்க்கத்தில் பிரவேசிப்பதற்குக் காரணமாக இருக்கிற நன்றியை பெற்றோர்களுக்குச் செய்யாத புதல்வரின் மூக்கு அறுபடட்டும் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறினர்கள்

வருவிய அனில்லாஹி தஆலா அன்னஹு கால மன் அஸ்பஹ மர்லியன் லிவாலிதைஹி மஸ்கதன் லீ பஅன அன்ஹு ராழின் வமன் அஸ்பஹமர்லியன் லீ மஸ்கதன் லிவாலிதைஹி பஅன அலைஹி ஸாகிதுன்

எனக்குக் கோபமூட்டிவிட்டு தன் பெற்றோர்களை திருப்தி செய்தவனை எவர் காலையில் எழுகிறாரோ அவரைக் குறித்து நான் திருப்தியுள்ளவனை இருப்பேன், என்னைத் திருப்திபடுத்தி விட்டு தன் பெற்றோர்களைக் கோபப்படுத்தியவராக எவர் காலையில் எழுகிறாரோ அவர் மீது நான் கோபமுள்ளவனாகி விடுவேன் என்று இறைவன் கூறியுள்ளதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

(தாய், தந்தைக்கு இடையூறு செய்து கொண்டு நற்பணிகளை ஊருக்குச் செய்வது மறுமையில் பயனளிக்காது தாய், தந்தையரை வேதனை செய்து கொண்டு இறைவனை திருப்தி செய்ய இதர நற்செயல்களைச் செய்வதால் இறைவன் திருப்தியடையமாட்டான் என்பது இந்த ஹதீது குத்ஸியின் கருத்து)

வகால அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் பிர்ரு ஆபா அகும் பபிர்ருகும் அப்னா உகும் வ அப்வன் அனின் னிஸாயி தஃபூ னிஸாஉகும்

உங்கள் பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள் உங்கள் புதல்வர்கள் உங்களுக்கு நன்றி செய்வார்கள். மனிதரின் பெண்களை மன்னியுங்கள். உங்கள் பெண்கள் மன்னிக்கப்படுவர் என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

வஸஅலஹு அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் ரஜுலுன் பகால மா ஹக்குல் வாலிதைனி அலா வலதிஹுமா பகால ஹுமா ஜன்னதிக வநாரிக

தம் குழந்தைகள் மீது பெற்றோர்களுக்கு இருக்கும் உரிமை என்னவென திருநபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வினவினர் அவ்விருவரும் உனக்கு சுவர்க்கமாகவும் நரகமாகவும் இருக்கின்றனர் என்று பதிலளித்தார்கள்.

குறிப்பு:-

பெற்றோர்களைப் பேணிக் காப்பாற்றி அவர்களின் திருப்தியைச் சம்பாதித்துக் கொண்டவர் சுவர்க்கம் புகுவார் அவர்களை பேணிக்காப்பாற்றாமல் சிரமப்படுத்தி அவர்களின் அதிருப்திக்கு ஆளானவர் நரகம் புகுவார் என்பது இந்த ஹதீதின் கருத்து. இஸ்லாத்தின் கடமைகளை தவறாமல் நிறைவேற்றியவர் பெற்றோர்களின் திருப்தியையும் பெற்றுவிட்டால் வேறு உபரி



வணக்கங்களை குறைவாகச் செய்திருந்தாலும் சுவர்க்கம் புகுவார். சன்மார்க்கம் விதித்துள்ள கடமைகளை நிறைவேற்றாமல் பெற்றோர்களைப் பேணிக் காப்பதை மட்டும் செய்தவரை இந்த ஹதீது குறிப்பிடவில்லை. இத்தகையோர் அவர்கள் செய்யாமல் விட்ட இஸ்லாமியக் கடமைகளைக் குறித்து விசாரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட தண்டனையை விட்டு மறுமையில் தப்ப இயலாது.

வகால அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்மன் ஸர்ரஹு அன் எமுத்த லஹு பீ உம்ரிஹி வஎஜ்அது லஹு பீ ரிஜ்கிஹி பல் எபிர்ரு வாலிதைஹி வல்எஷிலு ரஹிமஹு

தனக்கு வயது அதிகமாவதையும், தன் பொருள் பெருகுவதையும் விரும்புபவர் தன்னுடைய பெற்றோர்களுக்கு நன்றி செய்வாராக இன்னும் தன் உறவினர்களை அரவணைப்பாராக என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

குறிப்பு:-

உலகில் பிறந்த எவரும் மரிக்க விரும்புவதில்லை. இயன்றவரை அதிகமதிக காலம் இவ்வுலகில் வாழவும், தரித்திரமின்றி சுபிட்சமாக வாழவும், ஆரோக்கியமாக இருக்கவுமே விரும்புகின்றனர் அவர்களின் இந்நோக்கம் நிறைவேறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்கின்றனர் இறைவனின் கிருபையின்றி இவைகளை எவரும் பெறஇயலாது என்பது திண்ணம். அதனை அடைய எளிதான வழி தன்னுலியன்றவரை பெற்றோர்களைப் பேணிக்காப்பதும், அவர்களைப் பராமரிப்பதும் உறவினர்களை ஆதரிப்பதுமாகும் என்பதை மறந்து விடலாகாது.

வகால அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் தலாதத்துன் ஹர்ரமல்லாஹு தபாரகவத ஆலா அலைஹி முல் ஜன்னத்து எஷ்ரிபுல் கம்ர் வல்ஆபு லிவாலிதைஹி வத்தய்யூத் அல்லதீ எகிர்ருல் கபீது பீ அஹ்லிஹி.

நிரந்தரமாக மது அருந்துபவர் தனது பெற்றோர்களைத் துன்புறுத்துபவர் தன்னுடைய குடும்பத்தில் துற்செயல்கள் செய்பவரை நிலைநிறுத்துகிற தய்யூத்(கூட்டிக்கொடுப்பவர்) ஆகிய மூவருக்கு சுவர்க்கத்தை இறைவன் ஹராமா(வில)-க்கி வைத்திருக்கிறான் என திரு நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

குறிப்பு:- மது மதியைக் கெடுக்கும்; மதி கெட்டவர் எதைச் செய்தாலும் அது நல்லதா, கெட்டதா என்று பகுத்துணரா-மல் செய்யத்துணிந்து விடுவர், மதுவினால் பல நன்மைகள் விளைகின்றன என்று (மதுக்) குடிப்பழக்கமுள்ளவர்கள் கூறுவார்கள். அது அவர்களின் எண்ணம். மது மனித உடலுக்கு நன்மை செய்யும் பொருளாக அருந்ததக்கதாக இருப்பின் அதனை அருந்த வேண்டாம் என இறைவன் தடை செய்திருக்கமாட்டான். மனித உடலை அமைத்த-வனும். மதுவை உற்பத்தி செய்தவனும் இறைவனே, அவ்விரண்டின் தன்மைகளையும் அவைகளில் அவன் வைத்திருக்கும் குணநலன்களையும் அவனை விட அறிந்தவர் எவருமில்லை. ஆகவே மனித நன்மையைக்கருதி அவன் விதித்த கட்டளையை மதித்து நடந்து கொள்வது மனித இனத்திற்கு நன்மையே நல்கும் மாறாக நடப்பது மாற்றுப்பலனைத்தான் தரும்.

கர்ப்பத்திலிருந்து மனிதன் சுயபலமும் சுயசம்பாத்தியமும், சுய அறிவும் பெறும் வரையில் தன்னுடைய சுகத்தைக் கருதாமல் எத்தனையோ விதமான துன்பங்களை இன்பமாக மதித்து தன் சிசுவைப் பேணிக்காத்து வளர்த்த பெற்றோர்களின் நன்றியை மறந்து அவர்களை துன்புறுத்துவது சகிக்க முடியாத பெரும் பாபமாகும்.

தீயசெயல் புரிவோரை தன் குடும்பத்தில் இருக்க அனுமதிப்பது குடும்பத்தினர் யாவரும் கெட்டுப்போவதற்கு வழி



வகுக்கும். கெட்ட செயல்களைச் செய்து பணம் சம்பாதிப்பதையும், அதனால் வயிறு வளர்ப்பதைப் பார்க்கினும் ஈனத் தொழில் வேறு இருக்க முடியாது. ஆகவே இம்மூவகைத் தொழில்களும் மனிதனுக்கு தீங்கு விளைவிப்பது மட்டுமின்றி சமூகத்தையே கெடுக்கும் தொழில்களாகும். இத்தகையோருக்கு மறுமையில் உய்வில்லை.

கால ரஜுலுன் யாரஸூலல்லாஹி மன் அஹக்-கன்னாஸி பிஹுஸ்னி ஷுஹ்பதீ (அய் பிபிர்ரி வஸி-லதீ) பகால லஹு ஸல்அம் உம்முக கால தும்ம மன் கால உம்முக கால தும்ம மன் கால உம்முக கால தும்ம மன் கால அபூக

அழகிய முறையில் நான் சேர்ந்து வாழ்வதற்கு (அதாவது நான் நன்றி செய்வற்கும், ஆதரிப்பதற்கும்) மிகவும் உரிமையுள்ளவர் எவர் என்று திரு நபி (ஸல்)அவர்களை ஒருவர் வினவினார். அதற்கவர்கள்''உமது தாய்'' என்று விடை பகர்ந்தார்கள். பின்னர் எவர் என்று அவர் (மீண்டும் வினவினார். உமது தாய் என்று (மீண்டும்)விடையளித்தார்கள் பின்னர் எவர் என்று அவர் (மூன்றாவது முறையாக) வினவினார். உமது தாய் என்று (மூன்றாவது முறையும்)விடையுறுத்தார்' பின்னர் எவர் என்று (நான்காவது முறையாக ) அவர் வினவினார். அப்பொழுது உமது தகப்பன் என்று (நான்காவது முறையில்) கூறினார்கள்.

உபகாரம் செய்வதற்கும் , ஆதரிக்கப்படுவதற்கும் மனிதவர்க்கத்திலேயே முன்னுரிமை பெற்றவர்கள் பெற்றோர்களே இவ்விருவரிலும் மரியாதைக்கு முன்னுரிமை பெற்றவர் தந்தை. பணிவிடை செய்யப்படுவதற்கு முன்னுரிமை பெற்றவர் தாய். இவ்விருவரும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்த பின்னர்தான் ஏனைய

பந்துக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்விருமோ, இவ்விருவரில் ஒருவரோ மரித்து விட்டால் அவருக்காக பிரார்த்தனை புரிதல், அவருக்காக நன்மையான காரியங்களை செய்தல் போன்றவற்றை செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

## தந்தையின் கடமை

பிள்ளைக்கு தந்தை செய்ய வேண்டிய கடமைகளை பல இருக்கின்றன 1. பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தால் அவர்களைப் பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

2. அவர்களுக்கு நல்லொழுக்கம், நற்குணம், பண்பாடு ஆகியவைகளில் பயிற்சியளிக்க வேண்டும்.
3. இவைகளுக்கு நேர் விரோதமானவைகளை விட்டு விலக்கி வைக்க வேண்டும்.
5. பிள்ளைக்கு நல்ல பெயர்களை வைக்க வேண்டும்.

அல்லாஹுத்த ஆலாவின் பெயருடன் அடியான் என்ற பொருள்படுகிற அப்துல்லாஹ், அப்துர்ரஹ்மான் அப்துர்ரஹீம், அப்துல்லத்தீப் போன்ற பெயர்களையும்- நபிமார்களின் பெயர்களான ஆதம், நூஹ், இப்ராஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக், மூஸா, ஈஸா, முஹம்மத் போன்ற பெயர்களையும், இவர்களின் தொண்டன் என்ற கருத்தை அறிவிக்கும் குலாம் முஹம்மது குலாம் அஹ்மது, குலாம் ரசூல். குலாம் நபி என்பன போன்ற பெயர்களையும் வலீமார்கள், நல்லோர்கள் பெரியோர்களின் பெயர்களை வைத்தால் அத்தப் பெயர்களின் பரக்கத்தால் மதம்பண்பாடு, மதபக்தி, தெய்வ விசுவாசம் போன்றவைகள் கொஞ்சமேனும் இருக்கும். பெண்களுக்கு நம்பிராட்டிமார்கள், அவர்களின் செல்வப் புதல்விகள், சஹாபிகளாக இருக்கின்ற பாக்கியம் பெற்ற



பெண் சஹாபிகள் (சுமைய்யா போன்று) முற்காலத்து நபிமார்களின் தாய்மார்கள், மனைவியர், ஸாலிஹான நற்குண நன்னடைத்தயுள்ள மூமினான பெண்களின் பெயர்களை வைத்தால் பெண்களுக்கு அவர்களின் உயர்ந்த பண்புகள் ஏளவேனும் இருக்கும், இவைகளை விட்டு விட்டு இக்காலத்து அரசியல்வாதிகள், சினிமா நடிகர் நடிகைகளின் பெயர்களை குழந்தைகளுக்கு இக்காலத்தில் வைக்கின்றனர் இது விரும்பத்தக்கதல்ல சில நண்பர்கள் அப்துல்லாஹ் என்ற வார்த்தை அரபியாக இருக்கிறது. அது கூடாது அதனை தமிழில் வைக்க வேண்டும் என்று தேவதாஸ் என்று மாற்றுகின்றனர். தமிழின் மீது தங்களுக்குள்ள பற்றை வெளிவிடுவது அவர்களின் நோக்கமாக இருக்கலாம். அதே நேரத்தில் அவர்களுக்கு மத அறிவு போதாது மதப்பண்பாட்டில் கீழ்த்தரமானவர் என்பன போன்றவைகள் அந்த நண்பருக்கு இருக்கிறது என்ற எண்ணத்தையும் இத்தமிழ்ப் பெயர் பிறருக்கு உண்டாக்கி விடுகிறது.

5 நல்ல பெண்களை திருமணம் செய்து அவர்களின் மூலம் தந்தையாக வேண்டும் தன்னுடைய வாரிசு பரிசுத்தமானவரின் மூலம் உற்பத்தியாக வேண்டும்.
6 மக்களுக்கு நன்கொடைகள் வழங்குவதிலும் பராமரிப்பிலும் சமத்துவமாக நடந்து கொள்ள வேண்டும். மக்களில் ஒருவர் மீது அன்பு அதிகமாக இருக்கிறது என்பதற்காக பராமரிப்பிலும், வெகுமதி வழங்குவதிலும் ஓரவஞ்சனை செய்யலாகாது.
7 தந்தை மக்களுக்கு செய்யும் காரியங்களில் மிக முக்கியமானவை பண்பாடு, நல்லொழுக்கம், பயிற்சி ஆகியவைகள்தாம். இதில் கவனம் செலுத்தினால்தான் பிள்ளைகளுக்கு நற்செயல்களில் ஆர்வமும் சத்தியத்தை

உணரும் பக்குவமும் சன்மார்க்க விஷயங்களில் சிரத்தையும் உலகாதாயத்தில் பற்றின்மையையும், மறு உலகக்காரியங்களில் சிரத்தையும் உள்ளவர்களாக பிள்ளைகள் வளர்வர்.

இவ்விஷயங்களில் அக்கரையின்றி இவ்வுலக மாயை-யில் சிக்கியவர்களாகவும், சன்மார்க்க விஷயங்களில் அசட்டையுள்ளவர்களாகவும் பிள்ளைகள் இருக்கும் வண்ணம் வளர்த்தவர்களை அவர்களின் பிள்ளைகள் வேதனை செய்தால், துன்புறுத்தினால் பிள்ளைகளை நிந்திக்காமல் தங்களையே நிந்தித்துக்கொள்ள வேண்டியதே இக்காலத்துப்பிள்ளைகளில் பலர் தங்கள் பெற்றோர்களை துன்பத்திற்குள்ளாக்குவதற்கு பெரும்பாலான காரணம் பிள்ளைகளுக்குத் தேவையான மதக்கல்வி, மதபக்தி, மதப்பண்பாடு ஆகியவையில்லாமல் வளர்த்ததேயாகும் லாஹௌல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்.

## ஹிக்காயத்து

ஹலரத் மூஸா (அலை) அவர்கள் இறைவனுடன் பேசுபவர். கலீமுல்லாஹ் என்பது அவரது சிறப்புப் பெயர். இறைவனிடம் உரையாடுபவர் என்பது இதன் பொருள் ஒருநாள் இறைவனிடம் பேசுவதற்காக அவர் சினாய் மலைக்குச் சென்றார். அப்பொழுது இறைவன் ,,மூஸாவே இனிமேல் என்னுடன் ஜாக்கிரதையாக பேச வேண்டும் இது எச்சரிக்கை என்றுரைத்தான். மூஸா (அலை) வேதங் கொடுக்கப்பட்ட முர்ஸலான நபி என்பது மட்டுமல்ல உலுல் அஸ்மு என்னும் சாதனையாளர்களான ஆறுநபிமார்களில் ஒருவர். இறைவனின் இந்த திடீர் எச்சரிக்கையைச் செவியேற்று தம்மால் ஏதேனும் தவறு நடந்து விட்டதோ என்று அச்சமடைந்தவராக ரஹ்மானே



கிருபையாளனே, என்னிலிருந்து ஏதேனும் தவறு நிகழ்ந்து விட்டதோ, மன்னித்தருள்வாயாக என்று நடுக்கத்துடன் பிரார்த்தித்தார் அதற்கவன்,, உன்னிடமிருந்து தவறு நிகழவில்லை என்னுடன் நீர் பேச வரும் போதெல்லாம் ஒரு மூதாட்டி என்னிடம் உனக்காகப் பிரார்த்திப்பாள், அப்பிரார்த்தனை ,,நாயனே என் பிள்ளை உன்னுடன் பேச வருகிறான். அவனிடமிருந்து ஏதேனும் தவறு நிகழ்ந்தால் அதனை மன்னித்தருள்வாயாக,, என்று இருக்கும், அவளுடைய பிரார்த்தனையை நான் அங்கீகரித்து உம்மை மன்னித்துக் கொண்டிருந்தேன். அவள் மரித்து விட்டாள், உனக்காக பிரார்த்திக்க இப்பொழுது அவள் உயிருடனில்லை எனவே உமக்கு எச்சரிக்கை செய்தேன் என்று அறிவித்தான்

ஹலரத் மூஸா (அலை) அவர்களின் தாயார் தன் பிள்ளை சம்பந்தமாக இறைவனிடம் கேட்ட பிரார்த்-தனையை நிராகரிக்காமல் அங்கீரித்தது போல, ஒவ்வொரு தாயும் தன் மக்களுக்காக கேட்கும் பிரார்த்தனையை இறைவன் நிராகரிப்பதில்லை. ஆதலால் புத்திக் கூர்மை-யுள்ள புதல்வர்கள் தங்கள் அன்னையருக்கு பணிவிடை செய்து அவர்களின் ஆசீர்வாதத்தையும். வாழ்க்கையையும் பெற்றுக்கொள்ள முயல்வார்களாக.

## ஹிக்காயத்து

பம்பாய் நகரில் மஹாயிம் என்றொரு இடமுண்டு. அங்கு ஒரு தர்கா இருக்கிறது ஷெய்கு மக்தூம் ஷா (ரஹ்) என்பவர் அங்கு அடக்கும் செய்யப்பட்டிருக்கிறார். அவர் அதே ஊரைச்சேர்ந்தவர் தான். அங்குள்ள ஆலிமின் புதல்-வர். இந்த ஆலிம் பம்பாய் சேட்டுகளில் ஒருவர். செல்வ வசதியுள்ளவர். ஆதலால், சுற்றுப்புற ஊர்களிலும், உள்ளூ-ரிலும் பொதுமக்களுக்கு மார்க்க உபதேசம் செய்து கொண்-

டிருந்தார். செல்வ வசதியுள்ள ராக இருந்ததார் யாருக்கும் தயை தாட்சயமின்றி மதர்சட்டங்களைகூறிக்கொண்டிருந்தார். தக்வாவிலு(இறையச்ச)ம்,இபாத (வணக்க)த்தி லும் சிறந்து விளங்கினார்.

அவர் உபதேசம் செய்யச் செல்லுமிடமெல்லாம் தமது புதல்வரையும் தம்முடன் அழைத்துச் செல்வது வழக்கம் அத்துடன் இவரே தம் புதல்வருக்கு அரபி போதித்துக் கொண்டிருந்தார். பையனுக்கு ஏறக்குறைய பன்னிரண்டு வயதான போது தந்தை மரித்து விட்டார். அத்துடன் பையனின் அரபிக் கல்வியும் நின்றது. விதவைத் தாயுடன் மகன் பம்பாய் மஹாமியிலேயே வாழ்ந்துகொண்டிருந்தார் கொஞ்ச நாட்களுக்குப் பின்னர் ஒரு இரவில் விதவைத் தாயார் படுக்கையில் படுத்துக் கொண்டு மகனை அழைத்து அருந்துவதற்கு தண்ணீர் கொண்டு வருமாறு கூறினார் பையன் தண்ணீருடன் வந்த போது தாயார் தூங்கிக் கொண்டிருந்தார்.

தூங்கிக்கொண்டிருக்கும் தாயாரை உழுப்பி அவரின் தூக்கத்திற்கு இடையூறு செய்யலாகாது என்ற எண்ணத்தில் தாயாரை எழுப்பாமல் அவர்கழன் காலடியிலேயே தண்ணீரை வைத்துக்கொண்டு மகன் நின்றார். மணிக்கணக்காக நின்றும் தாயார் விழிக்கவில்லை நடுஇரவு தாண்டி மூன்றாவது வந்தது. தஹஜ்ஜத் தொழும் வழக்கமுள்ள தாய் கண் விழித்தார். மகன் காலடியில் நிற்பதைப் பார்த்து ஏன் நிற்கிறாய் என்று வினவினார். தண்ணீர் கொண்டு வருமாறு கட்டளையிட்டீர்கள்,தண்ணீர் கொண்டு வந்தேன். தாங்கள் தூங்கிவிட்டீர்கள். தங்களை எழுப்பி தூக்கத்தை கெடுக்க விருப்பமின்றி நின்று கொண்டிருக்கிறேன் என்றா. அப்பொழுதிருந்து



இங்கேயே நிற்கிறாயா என்று வினவினார் தாயார். ஆம் என்றார் மகனார். உடனே தாயார் படுக்கையை விட்டு எழுந்து மகன் கையிலிருந்த தண்ணீர் குவளையை வாங்கிக்கொண்டு, உனது படுக்கைக்குச் சென்று படுத்துக்கொள் என்று கூறி அனுப்பினார்.

இது நடந்த சில நாட்களுக்குப்பிறகு ஒரு நாள் அப்பையன் தனது தாயாரிடம் சென்று ''தாயே, நான் எனது கண்ணியமிக்க தந்தையார் அவர்களிடம் அறபி கற்றுக் கொண்டிருந்தது தங்களுக்குத் தெரியும். மதிப்பிற்குரிய எனது தந்தையாரின் மறைவால் எனது கல்வி நின்று விட்டது. அதனை நல்ல விதமாக கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை. பம்பாயில் முறைப்படி அமைக்கப்பட்ட அறபி மத்ரஸா இப்பொழுது இல்லை பிறருக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் அளவுக்கு திறமை மிக்க ஆசிரியர்களும் இல்லை. இம் மாநிலத்திலுள்ள சூரத் (தற்போது குஜராத்தில் உள்ளது) நகரில் நல்ல அறபி மத்ரஸா இநக்கிறது. பொறுப்புமிக்க ஆசிரியர்களும் இநக்கிறார்கள். வெளியூர் மணவர்கள் நூற்றுக்கணக்கில் அங்கு அறபி கற்று ஆலிம்களாகிக் கொண்டிருக்கின்றனர். வெளியூர்மாணவர்கள்தங்குவதற்கு வேண்டிய(ஹாஸ்டல்) வசதியும் உள்ளது. ஆதலால் நானும் அங்கு சென்று கல்விகற்கிறேன். விடுமுறையின் போது இங்கு வருகிறேன் என்று கூறி தாயாரின் அனுமதி கோரி நின்றார்.

மகன் கூறிய விபரத்தையும் மகனின் ஆர்வத்தையும் அறிந்த தாயார், ,,சற்று நேர யோசனைக்குப் பின் மகனை நோக்கி, ''மகனே உனது தந்தையாரைப் போல் நீயும் மார்க்க அறிஞராக ஆக வேண்டும். என்ற உனது ஆர்வத்தை தடுக்க விரும்பவில்லை' நீ சன்மார்க்க அறிஞராக வேண்டும் என்பதே என் ஆசை நீ அங்கு சென்று கல்வி

கற்பதற்கு பொருளாதாரத் தடையேதும் இல்லை. ஆனால் உன்னைப் பிரிந்து என்னால் வாழ இயலாது. அதுதான் தடையாக உள்ளது. சில நாட்கள் கழியட்டும். இறைவன் இதற்கொரு வழியைக் காட்டுவான் என்று பதிலளித்தார் அன்னை, சில நாட்களுக்குப் பின்னர் அன்னையிடம் மகன் இதே அனுமதியை மீண்டும் கோரினார். அதே பதில் தான் இப்பொழுதும் கிடைத்தது இதே போன்று பலமுறை நிகழ்ந்தது

பம்பாய் நகரம் போன்ற கடற்கரைப் பட்டினங்களில் வாழ்வோர் மாலை வேளையில் கடற்காற்று வாங்க கடற்கரைக்குச் செல்வது வழக்கம். இப்பையனும் செல்வார். ஒரு நாள் இவர் கடற்கரைக்குச் சென்ற போது அங்குள்ள பாறை ஒன்றின் மீது அமர்ந்திருந்த ஒருவர் இப்பையனை அழைத்து நீ அறபி படிக்க விருப்பப்படுகிறாய் அல்லவா? தினந்தோறும் இதே நேரத்தில் இங்கு வந்து என்னிடம் அறபி கற்றுக்கொள். நாளைய தினம் வரும்போது கித்தாபையும் எடுத்துக் கொண்டுவா என்று கூறினார்.

அன்னை கூறிய வார்த்தைகள் பலித்தன என்று மகன் மகிழ்ந்தார். மறுநாளிலிருந்து குறித்தநேரத்தில் கித்தாபுடன் சென்று அறபிக் கல்வியைப்பயின்று கொண்டிருந்தார். இவ்வாறாக சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அன்னை மகனை அழைத்து தினமும் மாலையில் கித்தாபுடன் செல்கிறாயே எங்கு செல்கிறாய் என வினவினார். அறபி ஓதி கொண்டிருக்கிறேன் என்றார். ஆசிரியர் யார்? எந்த (மத்ரஸா) என்பன போன்ற கேள்விகளை அன்னை வினவினார் வசதி படைத்த விதவையல்லவா? கற்றுக் கொடுக்கும் ஆசிரியருக்கு சம்பளம் கொடுக்கலாம். மத்ரஸாவிற்கு ஆதரவளிக்கலாம் என்பது அன்னையின் எண்ண போலும். பையன் பதிலளிக்கவில்லை. பலமுறை



வற்புறுத்திக் கேட்ட பின்னர் "தாயே உங்களுடைய கேள்விகளுக்கு இரண்டொரு பொய்களைக் கூறி தங்களை ஏமாற்றித் திருப்தியளித்து விட என்னால் இயலும் அப்படிச்செய்ய நான் விரும்பவில்லை எனது ஆசிரியர் தம்முடைய பெயரைக் கூறவோ, பாடம் நடக்கும் இடத்தை அறிவிக்கவோ வேண்டாம் அவ்வாறு சொன்னால் பின்னர் நான் வரமாட்டேன் என்று எச்சரித்திருக்கிறார். தங்களுடைய கேள்விக்கு நான் உண்மையாகவே பதிலளித்தால் எனது கல்விக்கு முடிவு வந்து விடும். பொய்யுரைத்தால் தாயை ஏமாற்றிய குற்றம். ஆதலால் இக்கேள்விக்கு பதிலளிக்குமாறு என்னை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டார். அவரது அன்னையும் பெண் இனத்தைச் சேர்ந்தவர்தானே, முரட்டுப் பிள்ளைகளிடம் முரண்டு செய்யாமல் ஒதுங்குவதும், கீழ்ப்படியும் பிள்ளைகளிடம் அதிகாரம் செய்வதும் பெரும்பாலான பெண்களின் வழக்கம். இவருடைய தாயார் மகனின் வேண்டுகோளை அங்கீகரிக்கவில்லை. பதில் இன்னது என்று புரிந்து கொள்ளும் ஆர்வத்தில் உண்மையை மறைக்காமல் கூற வேண்டும் என் வற்புறுத்தினார். அன்னை சொல்லை மீற முடியாமல் உண்மையைக் கூறினார்.

மறுநாள் வழக்கம் போல் பாடம் படிக்க கித்தாபுடன் சென்றபோது அங்கு ஆசிரியர் இல்லை. மாணவனுக்கோ மன வேதனை. மாதாவிடம் கண்ணீரும், கம்பலையுமாக வந்தார். நான் தங்களை பலமுறை வேண்டினேன். நீங்கள் என்னை மீண்டும், மீண்டும் வற்புறுத்தினீர்கள். எனது ஆசிரியர் தனது வாக்குப்படி வரவில்லை. எனது கல்விக்கு முடிவு வந்துவிட்டது என்று கூறி வருந்தினார் இந்நிலை ஏற்பட்டது உண்மையிலேயே வருத்தமாயினும் மகனிடம் அதைக் காட்டிக் கொள்ளவில்லை நீ வருந்தாதே மகனே, இறைவன் நாடினால் மீண்டும் அவர் வருவார். நீ உன்

கல்வியை தொடர முடியும் என்று கூறித் தேற்றினார். மகன் தினமும் மாலைப் பொழுதில் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பழைய பாடங்களைப் படித்து விட்டு ஆசிரியர் இல்லாத ஏக்கத்துடன் திரும்பிக் கொண்டிருந்தார். சில நாட்கள் இவ்வாறாகக் கழிந்தன. அப்புறம் ஒரு நாள் அந்த இடத்தில் ஆசிரியரைக் கண்டார். மட்டற்ற மகிழ்சியுடன் ஆசிரியரைச் சந்தித்தார். அப்பொழுதவர் மாணவரை நோக்கி 'உன் தாயார் முஸ்தஜாபுத்துவாவாகஇருக்கிறார், உமது தாயின் பிரார்த்தனையை இறைவன் அங்கீகரித்து விட்டான். தினமும் நான் இங்கு வந்து கல்விகற்றுக் கொடுப்பது உசிதமல்ல. ஒரே நாளில் கற்றுக்கொடுத்து விடுகிறேன். வாயைத் திற என்று கூறினார் ஆசிரியரின் கட்டளைக்குப் பணிந்து வாயைத் திறந்தார். ஆசிரியர் வாயினுள் உமிழ்ந்து, விழுங்கி விடுமாறு பணித்தார். அவ்வாறே அவரும் விழுங்கினார். பின்னர் மாணவரிடம் இனிமேல் நான் வரவேண்டிய அவசியமில்லை. கித்தாபுகளை நீ எடுத்துப்படிக்கலாம். அது உமக்குப்புரியும் மறந்து விடாது என்றுகூறி மறைந்து விட்டார். இவ்வாசிரியர் ஹலரத் கிழுறு (அலை) அவர்களாவார்கள்.

இம்மாணவர் மூதறிஞரான தனது தந்தையிடம் ஆரம்பக்கல்வியைப் பயின்றார். அவரிடமிருந்து உபதேசங்களைக் கேட்டார். மதப்பண்பாட்டில் பயிற்சி பெற்றார். பணிவிடை செய்யப்படுவதற்கு முதன்மையானவர் தாய்தான் என்று மேலே உள்ள ஹதீதுக் கேற்ப அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே நித்திரை செய்யும் தாயை எழுப்பி இடையூறு செய்யாமல் தண்ணீர்க் குவளையுடன் தாயாரின் விழிப்புக்காகக் காத்திருந்தார். மகனின் மதப்பண்பை அறிந்த விதவைத்தாய் மகனுக்காக இறைவனிடம்பிரார்த்தனை புரிந்ததால் நபிமார்களில் ஒருவர் எனக்கருதப்-



படுபவரும், ஹலரத் மூஸா (அலை) அவர்களுக்கு அகக்கல்வியை கற்பித்தவருமான ஹலரத் கிழுறு (அலை) அவர்களிடம் கல்வி பயின்று அன்னாரின் மாணவராக ஆகும் பேற்றினைப் பெற்றார். இப்பேற்றின் பயனாக பிற்காலத்தில் அநேக அற்புதங்கள் என்னும் கறாமத்துக்கள் அவரிடமிருந்து வெளியாயின. தமது தந்தை விட்டுச்சென்ற சொத்துக்களிலிருந்து மஹாயிமில் அரபி மத்ரஸாவையும், மஸ்ஜிதையும் அவை நீண்டகாலம் தொய்வின்றி தொடர்வதற்கு சிலசொத்துக்களையும் அளித்தார். மத கிரந்தங்கள் நிறைந்த புத்தகாலயத்தையும் ஏற்படுத்தினார். இது மட்டுமின்றி திருக்குர்ஆனின் அகப்பொருள்களை விளக்கும் தப்ஸீர் ஒன்றையும். ஷாபிஈ மத்ஹபு பிக்ஹு மஸ்அலாக்களை விளக்கும் சட்டநூலையும் அரபியில் எழுதி உலக முஸ்லிம்களுக்கு ஈந்தார். அந்நூல்கள் இந்தியாவிற்கு வெளியிலுள்ள துருக்கி, வடமேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மொரோக்கோ உள்பட முஸ்லிம்கள் வாழும் நாடுகளிலெல்லாம் பரவியிருக்கின்றன.

அவர் கட்டிய மஹாயிம் மஸ்ஜிதிலேயே அவரும், அவருடைய தாயாரும், அவர் குடும்பத்தில் பணியாற்றிய ஒரு பெண்ணும் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஏராளமான மக்கள் தினந்தோறும் அங்கு சென்று ஜியாரத் செய்கின்றனர். பம்பாயிலுள்ள போலீஸ்காரர்கள் வியாழன் தோறும் பிற்பகலில் அணிவகுத்துச் சென்று ராணுவ மரியாதையும் செய்கின்றனர். இது பழங்காலத்துப் புத்தகங்களைப் பார்த்து எழுதும் செய்தி மட்டுமல்ல, அடியேனும் பல முறை அங்கு சென்று ஜியாரத் செய்தும், அங்குள்ள நூல் நிலையங்களிலிருக்கிற அறபி நூல்களை எடுத்துப் படித்தும் அந்த மஸ்ஜிதில் தொழுதும் ஏராளமான மக்கள் அங்கு வந்து ஜியாரத் செய்வதையும் நேரில் பார்த்து

புரிந்து எழுதும் செய்தி. இவருடைய சரித்திரம் ஆப்தாபே கோக்கன் என்ற பெயரால் உர்தூ மொழியில் எழுதப்பட்டு பம்பாய் முஹம்மது அலி வீதி: பிண்டி பஜார் போன்றவைகளிலுள்ள இஸ்லாமிய நூல் நிலையங்களில் விற்பனைக்குக் கிடைக்கிறது. பெற்றோர்கள்தான் உனது சுவர்க்கமும் நரகமும் என்ற நபிமொழிக்கிணங்க பெற்றோரின் அன்பையும், துஆவையும் பெற்றுக்கொண்ட இப்பெரியார் இவ்வுலகில் அடைந்துள்ள பெருமையும் கண்ணியமும், வாழ்வும் நம் யாவருக்கும் வழிகாட்டிகளாகவும் முன் மாதிரிகளாகவும் அமைந்திருக்கின்றன. எல்லாம் வல்ல ரஹ்மான் நம் யாவரையும் அரவணைத்து பெற்றோருக்கு நன்றி செய்த பிள்ளைகளாகத்திகழ அருள்புரிவானாக ஆமீன்.

## ஹிக்காயத்து

ஒருவர் சிறைய் பாலைவனத்திலுள்ள ஒரு ஊருக்குச் சென்றார். அந்தி வேளையாயிற்று. இருட்டும் முன்னர் குறித்த இலக்கை அடைந்து விட வேண்டும் என்பது அவருடைய எண்ணம் வழித்துணையின்றியே அவர் சென்றார். பரந்த வெளியில் இருட்டு நேரத்தில் விஷ ஜந்துக்கள் வெளிவந்து விடும். அன்றி பாதையும் தெரியாது என்று விரைந்து நடந்தார். ஆயினும் குறித்த இடம் போய்ச்சேர முடியவில்லை. கடுமையான இருள் சூழ்ந்தது. உடன் எவருமில்லை பெரும், பெரும் நகரங்களில் தான் இக்காலத்தில் சிறந்த ரோடுகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு இக்காலத்திலுங்கூட ரோடுகள் போடப்படாமல் இருக்கின்றன. அக்காலத்தில் மின் விளக்குகள் கண்டு பிடிக்கப்படவில்லை சிமின்ட் ரோடுகளோ, தார் ரோடுகளோ நகர்ப்புறங்களில் கூட இல்லை. இந்நிலையில் பாலைவனத்தில் பத்துப்பதினைந்து மைல்களுக்கு நாற்பது,



ஐம்பது வீடுகளைக் கொண்ட குக்கிராமங்கள்தாம் இருக்கின்றன. பெரும்பாலானவர்கள் ஏழைகள்இவர்களின் கிராமங்களில் மேஜர் பஞ்சாயத்து, மைனர் பஞ்சாயத்து A.டிவிசன் பஞ்சாயத்து, B-டிவிசன் பஞ்சாயத்து என்ற சொல்லத்தக்க கிராமம் இன்றும் கூட இல்லாதிருக்கும் நிலையில் அக்காலத்தில் எப்படி இருக்கும் என யூகித்துக்கொள்ள வேண்டியதுதான். வாகனப் போக்குவரத்திற்குரிய வழி இல்லை. ஒட்டகை,குதிரை,கழுதைகள் போன்றவைகள்தான் வாகனங்களாக உபயோகப்படுத்தப்பட்டன. இவைகளுக்கு அகலமான பாதை தேவையில்லை. குறுகிய பாதையே போதுமானது. இப்பாதைகளில் பகற்காலங்களில், அல்லது நிலாக்காலங்களில்தான் செல்ல முடியும், இருட்டு வேளையில் செல்வது அசாத்தியம் என்றே சொல்ல வேண்டும். எனவே அவருக்குப்பாதை தெரியாத கவலையுடன் விலங்குகளைப்பற்றிய பீதியும் சேர்ந்து கொண்டது. வழியில் நின்று பாதையறிந்து செல்லவும் மனம் இடந்தரவில்லை.

இந்நிலையில் அவருக்கு திடீரென ஒரு நினைவு வந்தது நபிமார்களில் இருவர் இவ்வுலகில் வாழ்கின்றனர் மனிதர்களுக்கு சாதாரணமாகத் தென்படுவதில்லை, கடலில் எவராவது சிக்கித்தவித்தால் நபி இல்யாஸ் (அலை) அவர்கள் உதவி செய்து காப்பாற்றுகிறார்கள் தரையில் எவராவது ஆபத்தில் சிக்கிக் கொண்டால் அவருக்கு கிலுறு (அலை) அவர்கள் உதவி செய்து காப்பாற்றுகிறார்கள் என்று படித்திருக்கிறோம் அல்லவா? இப்பொழுது நாம் பாலைவனத்தில் சிக்கிக் கொண்டோம். நமது நிலையும் ஆபத்தாக இருக்கிறது. அவர் வந்து நமக்கு உதவி செய்யட்டும் என்று நிய்யத்துச்செய்தார், உறுதி கொண்டார். தன்னுடைய கோரிக்கைக்கு சூரத்யாஸீனை எவர் முன்னிலையாக்கிக் கொள்கிறாரோ அவருக்கு அவரது கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று நபிமொழித்திரட்டுகளில்

கூறப்பட்டிருப்பதை நினைவு கூர்ந்து சூரத் யாசீனை நான்கு முறை திரும்பத்திரும்ப ஓதி விட்டு ''நாயனே உனது நபி கிழுறு (அலை) அவர்களை இச்சமயத்தில் அனுப்பி எனக்கு வழி காட்டுவாயாக'' என்று பிரார்த்தித்தார்.

சூரத் யாசீனும், துஆவும் நடந்து கொண்டிருக்கும் போதே நிகழ்த்தப்பட்டது அவருக்கு சற்று முன்னர் யாரோ செல்வது போல் தோன்றிற்று அவரை அணுகி வழியைக்-கேட்கலாம் என்று விரைந்து சென்றார். என்றாலும், அவரை நெருங்க முடியவில்லை. அவருக்கும் இவருக்கும். மத்தியிலுள்ள இடைவெளி குறையவில்லை. சப்தமிட்டு ஸலாம் சொன்னார். பதில் ஸலாம் கிடைத்தது. அவர் சற்று நின்றார். அவரிடம் சென்று தான் செல்லும் ஊரின் பெயரைக் கூறி வழி தெரியாமல் தவிக்கிறேன் என்றார் தம்மைத் தொடருமாறு அவர் சைகை செய்து விட்டு முன்னால் நடந்தார். இறுதியாக ஒரு இடத்திற்கு வந்ததும் திரும்பிப்பார்த்து அவர் செல்லும் ஊரை தமது கைத்தடியால் சுட்டிக்காட்டினார் அப்போது, அவரைப் பார்த்தால், கைத்தடியின்றி நடக்க இயலாத வயோதிகரைப் போல் தோன்றிற்று, அவர் காட்டிய திசையில் சிறிது தூரத்திற்கு அப்பால் ஒரு கிராமம் இருப்பது தெரிந்தது.

அதற்குள்ளாக இவ்வயோதிகர் ஹலரத் கிழுறு (அலை) அவர்களாக இருக்கலாம் என்ற ஐயம் அவர் உள்ளத்தில் தோன்றிற்று தைரியம் பிறந்தது, துணிச்சல் உண்டாது ஓடிச் சென்று. அவரது கைத்தடியைப் பிடித்துக் கொண்டு ''நில்லுங்கள், நீங்கள் யார்? கிழுறு நபியா இறைவன்மீது பிரமாணமாகக் கேட்கிறேன். நீங்கள் மறைக்கக் கூடாது என்று வினவினார். அதற்கவர் ''ஆம்'' நான் கிழுறுதான் என்று பதிலளித்தார். ஒரு நபியைப் பார்க்கும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததே என்று அவர் கரங்களைப்



பற்றி முஸாபஹா செய்து முத்தமிட்டுக் கொண்டார், ஒரு சிறு சந்தேகம் அதனை தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும். தங்களை நேரில் சந்தித்தவர் வலிமார்களில் ஒருவராக ஆகிவிடுவார் என்று பெரியோர்கள் சொல்ல கேள்விப்பட்-டேன், அப்பேறு எனக்குக் கிடைத்துவிட்டது நான் சாமான்யன். மார்க்கக் கல்வியை அதிகம் கற்றுக் கொள்ளாதவன், பிறரைப் போன்றே நானும் வணங்குகிறேன், நோன்பு நோற்கிறேன் உபரி வணக்கம் எதுவும் தொழுவதில்லை. இந்நிலையில் தங்களை நான் சந்திப்பதென்றால் என்னுள் ஏதாவது பிரத்யேகத் தன்மை இருக்க வேண்டுமல்லவா? அது யாது என வினவினார், நீர் கூறுவது உண்மை நீர் சாமான்யர் தான். ஆனால் உமது தாயாரைச் சந்தோஷப்-படுத்தி அவரை நன்கு கவனித்ததால் நீ என்னைச் சந்திப்பதற்கு உரிய காரணங்கள் என்று கூறி மறைந்தார்கள்.

பின்னர் அவர்தம்முடைய ஊருக்குச் சென்றடைந்தார் இந்நிகழ்வுகள் மூலம் தாயின் மகிமை நமக்குப் புலனாகிறது. நம்மவரில் எத்தனைபேர் தாயை மகிழ்வித்திருக்கிறோம் என்று சிந்தித்துச் செயலாற்றுவோமாக.

## ஸிலத்துல் அர்ஹாம்
## உறவினர்களை ஆதரித்தல்

உறவினர்கள் என்ற வார்த்தை பெற்றோர்கள் மனைவி-யர் இவர்களுக்கும் பொருந்தும் இவர்களைப்பற்றி மேலே கூறப்பட்டு விட்டதால் இவர்களல்லாத ஏனைய பந்துக்கள் பற்றி பார்ப்போம் இவர்களில் தந்தையுடன் பிறந்தவர் தாயுடன் பிறந்தவர் இவர்களின் சந்ததியினர் ஆகியோர் நெருங்கிய உறவினர்கள் மற்றவர்கள் சற்று தூர உறவினர்

கள். இவர்களைக் குறித்து இறைவன் தமது திருமறையில் வஃதூ தல்குர்பா ஹக்கஹு உறவினர்களுக்குஅவர்களுக்குரிய பாத்தியதைக் கொடுப்பீராக என்றும் வல்லதீன யஷிலூன மா அமரல்லாஹு பிஹி அய்ன்ய் யூஷல எக்ஷவ்ன ரப்பஹும் வ யகாபூன ஸு அல் ஹிஸாப் வமிம்மா அமரல்லாஹு பிஹி அன்ய் யூஷிலல் அர்ஹாம் ஆதரிக்கப்பட வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டதை ஆதரிப்பவர்கள் இன்னும் தங்களுடைய ரப்பை அஞ்சுகிறவர்கள் இன்னும் கடுமையான விசாரணையையும் உறவினர்களை ஆதரிக்கப்பட வேண்டும் என இறைவன் ஏவியதை பயப்படுகிறவர்கள் ஆகியோரைப் பாராட்டிக் கூறியுள்ளான்'

உறவினர்களை ஆதரிக்காமல் ஒதுக்கி வைப்பவர்களைக் குறித்து இறைவன் தனது திருமறையில் வல்லதீன யன்குலூன அஹ்தல்லாஹி மிம் பஃதி மீதாகிஹி வ யக்தஊன மா அமரல்லாஹு பிஹி அய்ன் யூஷல வயுப்ஸிதூன பில்அர்லி உலாஇகஹுமுல் லஃனது வலஹும் சூஉத்தார் இறைவனிடத்தில் உடன்பாட்டை உறுதிப்படுத்திய பின், அதனை முறித்து, ஆதரிக்கப்பட வேண்டும் என்று இறைவன் ஏவியதை அவர்கள் முறிக்கிறார்கள். இன்னும் புவியில் அவர்கள் குழப்பம் செய்கிறார்கள் அவர்களுக்கு முனிவு இருக்கிறது. அவர்களுக்குக் கெட்ட வீடு இருக்கிறது என்றும் பஹல் அஸைதும் அன் தவல்லைதும் அன் துப்ஸிதூ பில் அர்ழி வதக்தஊ அர்ஹாமகும் உலாயிகல்லதீன லஅனஹுமுல்லாஹு பஅஷம்மஹும், வ அஃமா வ அப்ஷாரஹும் புவியில் நீங்கள்



குழப்பம் விளைவிப்பதற்காகவும், உங்கள் உறவுகளை முறிப்பதற்காகவும் நீங்கள் பின் வாங்குகிறீர்களா? அவர்களைத்தான் அல்லாஹ் சபித்து, அவர்களைச் செவிடாக்கி, குருடாக்கி இருக்கிறான் என்றும் சபித்து இருக்கிறான். உறவினர்களை அரவணைக்காமல் ஒதுக்கி வைப்பவர்களுக்கு அல்லாஹ்வின் சாபம் வரும் என்று திருக்குர்ஆன் தெளிவாக கூறியிருக்கிறது.

ஸய்யிதுனா இமாம்ஹுசைன் (ரலி) அவர்களின்புதல்வரான அலீ ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்கள் தங்களது புதல்வருக்குக் கூறிய (வஸிய்யத்) அறிவுரையில் உறவினர்களை ஆதரிக்காமல் ஒதுக்கி வைத்திருப்பவர்களுடன் நட்பு கொள்ளாதே அவர்கள் இறைவனின் முனிவுக்கு ஆளானவர்கள் என்று மூன்று இடங்களில் திருக்குர்ஆன் கூறுகிறது என்று கூறியுள்ளார்கள்.

கால ரசூல் (ஸல்—அம்) மன் கான யுஃமினு பில்லாஹி வல்யவ்மில் ஆகிரி பல்எஷில் ரஹிமஹு வமன் கான யுஃமினு பில்லாஹி வல்யவ்மில் ஆகிரி பல் யக்ரிம் ளைபஹு வமன் கான யுஃமினு பில்லாஹி வல்யவ்மில் ஆகிரி பல் எகுல் கைரன் அவ் லஎஸ்முத்

அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசித்தவர் தனது உறவினர்களை ஆதரிப்பாராக. கடைசி நாளையும் விசுவாசித்தவர் தன்னுடைய விருந்தினரை கண்ணியப் படுத்துவாராக அல்லாஹ்வையும் கடைசி நாளையும் விசுவாசித்தவர் நல்லதைச் சொல்ல வேண்டும் அல்லது மௌனமாய் இருக்க வேண்டும் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

விசுவாசி என்றும், முஸ்லிம் என்றும் தன்னைக் கூறிக்கொள்பவர்கள் உறவினர்களை ஆதரிக்க வேண்டும். விருந்தினர்களை உபசரிக்க வேண்டும். தனக்கோ பிறருக்கோ நன்மை பயக்கும் பேச்சையே பேசவேண்டும். எவருக்கும் தீமையை விளைவிக்கிற பேச்சுக்களை பேசலாகாது இன்றைய உலகில் நிகழும் சச்சரவுகளுக்கான காரணங்களில் தேவையற்ற பேச்சும் பிரதான காரணமல்லவா? நல்ல வார்த்தைகளால் எவ்வளவு பெரிய பிரச்சனைகளையும் சிக்கல்களையும் தீர்த்து விடலாம். அற்பமான சிறிய விஷயங்கள், பெரிதாவதற்கு தடித்த வார்த்தைகள் காரணமாவதுண்டு, மேலும் கரடு முரடான வார்த்தைகளின் காரணமாக நண்பர்களும் உறவினர்களும் கூட கடும் பகைவர்களாக மாறக் கூடும் மதுரமான இனிய வார்த்தைகளால் பகைவர்களும் நண்பர்களாகி விடுவதையும் காண்கிறோம். கால அலைஹிஸ்ஸலாம் மன் ஸர்ரஹு அய்ன் எழுத்த லஹு பீ உம்ரிஹி வயூஸஉ லஹு பீ ரிஜ்கிஹி வயத்பஉ அன்ஹு மைதத்தஸ்ஸூஇ பல் எத்தகில்லாஹ வல் எஷில் ரஹிமஹு தனக்கு நீண்ட ஆயுள் நிறைந்த வருமானம் அகால மரணம் ஏற்படலாகாது என்று விரும்புபவர் இறைவனைப் பயந்து உறவினர்களை ஆதரிக்கட்டும் என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் தேவையானவைகளை பெறநீண்ட நாட்கள் வாழ வேண்டும் வாழக்கூடிய காலங்களில் பெற வேண்டும். மரிக்கும் போது சிரமமின்றி மரிக்க வேண்டும் என விரும்பாதவர்கள் உலகில் எவருமில்லை. அத்தகையவர் தாய், தந்தையர், உற்றார், உறவினர் நலன் பேண வேண்டும் என்பது இந்த நபி மொழித்திரட்டின் இருந்தது.



வகால ஸல்-அம் கால தஆலா அனல்லாஹு வஅனர் ரஹ்மான் கலக்த்துர்ரஹ்ம வஷக்கக்தலு-ஹா இஷ்மன் மின் இஸ்மீ ஃபமன் வஷலஹா வஷலத்ஹு வமன் கதஅஹா கதஃதுஹு" நான் அல்லாஹ், நான் ரஹ்மான், உறவுகளை நான் படைத்தேன், அதற்கு என்னுடைய பெயரிலிருந்து ஒரு பெயரைச் சூட்டினேன். அதனை ஆதரிப்போரை நான் ஆதரிப்பேன். அதனைத் துண்டித்தவரை நானும் துண்டிப்பேன் என இறைவன் கூறியதாக திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். வகால ஸல்-அம் லா எத்குலுல் ஜன்னத காதிஉர்ரஹீம் உறவுகளை துண்டித்தவர் சுவர்க்கம் செல்லமாட்டார் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். வகால ஸல்-அம் இன்னர்ரஹ்மத் லாதன்ஜிலு அலா கவ்வின் பீஹிம் காதிஉர்ரஹிம் உறவுகளை துண்டித்த சமூகத்திற்கு இறைவனின் அருள் கிட்டாது என திரு நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்

உறவினர்களுடன் இணையாமல் அவர்கள் ஒதுக்கி வைத்தும் பரஸ்பரம் உதவி செய்து கொள்ளாமலும் அரவணைத்துக் கொள்ளாமலும் வாழ்பவர் எந்த சமூகத்தில் இருக்கிறாரோ அந்தச் சமூகத்திற்கு இறைவனின் கிருபை இல்லை என்பது இந்த ஹதீதின் கருத்து, என அறிகிறோம் அவ்வாறு வாழ்பவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொள்வாராக'

பாபங்கள் பல வகைப்படும். அவைகளில் உறவினர்களை புறக்கணிப்பது பெரும் பாபங்களில் ஒன்று. சில பாபங்களுக்கு இவ்வுலகில் மட்டுமே தண்டனை உண்டு சில பாபங்களுக்கு இம்மையிலும். மறுமையிலும் தண்டனை

உண்டு. ஈருலகிலும் தண்டனை கிடைக்கும் பாபங்களில் இதுவும் ஒன்று. முற்கூறப்பட்ட நபி மொழிகள் மறு உலகில் கிடைக்கும் தண்டனைகள் பற்றியவை இவ்வுலகில் கிடைக்கும் தண்டனைகள் பற்றிய நபி மொழிகளைக் காண்போம் ,,கால ஸல்–அம் இஸ்ரஉல் கைரி தவாபல் பிர்ரி வஷிலத்துர்ரஹ்மிவ இஸ்ரஉஷ்ஷர்ர இகாபல் பக்யீ வகித்அத்தர் ரஹ்மி,,

நன்மைப்பயன் அளிக்கும் விஷயத்தில் அதிவேகமான நற்செயல் பெற்றோருக்கு நன்றி செய்வதும், உறவினர்கள் ஆதரிப்பதும் ஆகும். தண்டனை வரவழைப்பதில் அதி வேகமான தீய காரியம் பெற்றோரைத் துன்புறுத்துவதும் உறவுகளை முறிப்பதும் ஆகும் என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள் வகால ஸல்அம் மா மின் தன்பின் அஜ்தரு அய்ன் யுஃஜலல்லாஹு லிஸாஹிபிஹில் உகூபதி பித்துன்யா மஅ மா எத்கரு லஹு பீல் ஆகிரதி மினல் பக்யி கதீஅதிர்ரஹ்ம்,

எந்தக் குற்றமும் அதனைச் செய்தவருக்கு மறுமையில் தண்டனையை தயார் செய்து வைத்திருப்பதுடன் இவ்வுலகிலகிலும் அல்லாஹ் தண்டனையை துரிதப்படுத்துவதற்கு பெற்றோரைத் துன்புறுத்துவதையும் உறவை முறிப்பதையும் விட மிக அருகதையுள்ள குற்றம் வேறு எதுவுமில்லை என்று திரு (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெற்றோருக்கு நன்றி செய்வதற்கும் உறவினர்களை ஆதரிப்பதற்குமுள்ள நன்மைப்பயன் இவ்வுலகிலும் மறுமையிலும் கிடைப்பது போன்றே பெற்றோரை



துன்புறுத்துவதற்கும் உறவை முறிப்பதற்கும் உள்ள தீமைப்பயன் இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கும் என்பதை இந்த ஹதீதுகளிலிருந்து தெரிந்து கொள்கிறோம் ஆகவே உறவினர்கள் தன்னை ஆதரித்து உபகாரம் செய்யா விடினும், அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும்.

வகால ஸல்–அம் லைஸல் வாஷிலு பில் மகாபீ வலாகின்னல் வாஷிலு ஹுவல்லதீ கதஃத ரஹ்மதஹு வஷிலஹா

பதிலுக்கு பதில் செய்பவர் உறவினர்களை ஆதரிப்பவரல்லர் எனினும் தன்னை விட்டு ஒதுங்கிச்செல்பவரை அரவணைப்பவர்தான் ஆதரிப்பவர் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கால ஸல்–அம் அப்ஃழலுஸ் ஸதகதி அலா தில்ரஹ்மில் காஷிஹி

சிறந்த தர்மம் உள்ளத்தில் பகைமை கொண்டுள்ள பந்துவுக்கு கொடுப்பது என திரு நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உறவினர்களில் சிலர் உள்பகை வைத்திருப்பவர் எப்பொழுதும் இடையூறு செய்வதே அவர் வேலையாயிருக்கும். இவ்வாறானவர்கள் வறியவர்களாக இருந்து ஜக்காத் ஸதக்கா போன்றவைகளைப் பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாயிருப்பின் அவர்கள் கொடுக்கும் இடையூறுகளைக் கருதாமல் அவர்களுக்கும் அந்த தர்மத்திலிருந்து கொடுக்க வேண்டும். இடையூறு கொடுப்பவர் என்பதற்காக அவருக்கு தர்மம் கொடுப்பதை நிறுத்தலாகாது.

ஹலரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உம்மு மிஸ்தஹ் என்பவர் சிறிய தாயின் புதல்வி (சகோதரி) ஸித்தீக் (ரலி) அவர்கள்தான் அந்த பெண் ஸஹாபிக்கும் அவருடைய புதல்வருக்கும் உதவி செய்து கொண்டிருந்தார்கள். அன்னை ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்கள் மீது அவதூறு செய்தவர்களுடன் உம்மு மிஸ்தஹ் (ரலி) அவர்களின் புதல்வரும் சேர்ந்து அவதூறுகளை பரப்புவதில் முன்னணியிலிருந்தார். இவ்விஷயம் நீதி விசாரணைக்கு வந்தது. அன்னை ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்கள் குற்றமற்றவர் என தீர்ப்பு வந்தது. தெய்வ அறிவிப்பும் குற்றமற்றவர் என்று கூறியது. அவதூறு செய்தமைக்காக உம்மு மிஸ்தஹின் புதல்வரும் கசையடி தண்டனைக்குள்ளானார்கள்.

இது முடிந்தவுடன் ஹலரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் தங்கள் செல்வி அன்னை ஆயிஷா சித்தீக்கா (ரலி) அவர்கள் மீது அவதூறு செய்த தம்தங்கையின் புதல்வருக்கு இனி எவ்வுதவியும் செய்யப் போவதில்லை என்று அறிவித்தார்கள். இதனை இறைவன் கண்டித்து அவர்க.. இடையூறு அளித்தாலும் செய்யும் உதவிகளை நிறுத்தலாகாது என்று கட்டளையிட்டான். இக்கட்டளைக்கேற்ப ஹலரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் தங்கள் உதவியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்கள்.

திரு நபி (ஸல்) அவர்களிடம் ஒரு ஸஹாபி வந்து யாரசூலல்லாஹ் எனக்கு உறவினர்கள் இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உதவிகள் செய்து கொண்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் எப்பொழுதும் எனக்கு இடையூறு செய்து கொண்டேயிருக்கிறார்கள். நான் செய்யும் உதவிகளை நிறுத்தி விடலாமா? என வினவினார், அதற்கு திரு நபி (ஸல்) அவர்கள் நிறுத்த வேண்டாம். நீ அவர்களுக்கு



அவர்களுக்கு தொடர்ந்து உதவி அளித்து வந்தால் இறைவனின் உதவி உனக்கு தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கும் என்றார்கள் இது சம்மந்தமான விரிவான விபரத்தை "ஸஹீஹுல் புகாரி" எனும் நூலில்காண்க. கால ஸல்—அம் அல் முதஅத்தீ பிஸ்ஸதக்கத்தி கமானிஅஹா தர்மத்தில் கடப்பவர் அதனைக் கொடுக்காதவர் போல் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்,

உதவி பெறுவதற்கு தகுதியானவர்கள் தமது உறவினர்களில் இருக்கும்போது, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யாமல், அடுத்தவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்பவர் அதனைக் கொடுக்காதவர் போன்று என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்,

வவரத் இன்ன மன் எத்தசத்தக்க அலல் அஜானிபி
மஅ இல்மிஹி பிஹாஜத்தின் அகாரிபஹு இலா
ஸதகத்தின் லா யக்பிலு ஸதக்கத்துஹு

தன்னுடைய உறவினர்கள் தனது தர்மத்தை பெறுவதற்கு உரியவர்கள் என்று தெரிந்தே அடுத்தவருக்கு உதவி செய்தால் அவ்வுதவி உதவியாகக் கருதப்படமாட்டாது எனவும் வந்துள்ளது.

வகால ஸல்—அம் அஸ்ஸதக்கத்து அலல் அஜானிபி
ஸதக்கத்துன் வஸ்ஸதக்கத்து அலல் அகாரிபி
இத்னானி ஸதக்கத்துன் வஷிலத்துன்

அடுத்தவருக்குச் செய்யும் உதவி ஒரு தர்மம் உறவினர்களுக்குச் செய்யும் உதவி தர்மம், உறவினர்களை ஆதரித்தல் என்ற இரு அம்சமும் பொருந்தியது என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குறிப்பு:-

உறவினர்களுக்கு இவ்வுதவி தேவையில்லாதிருப்பின் அடுத்தவரும் உறவினர்களின் நிலையிலேயே சமமாகக் கருதப்படுவார் அப்போது மேற்கூறியவாறு இருவித நன்மைகளை அடைவார் உறவினர்கள் தேவையுள்ளவராயிருந்து அடுத்தவருக்கு உதவி செய்தால் அதை உதவியாகக் கருதப்படமாட்டாது என மேலே கண்ட ஹதீதிலிருந்து தெரியவருகிறது. இக்காலத்திலுள்ள செல்வந்தவர்கள் தர்மம் செய்வதில் சளைத்தவர்களல்ல ஆனால் ஜக்காத்தை யாருக்குக் கொடுக்க வேண்டும். ஸதக்காவை யாருக்குக் கொடுக்க வேண்டும். வாங்குவதற்கு தகுதியானவர்கள் யாவர்? ஜக்காத் என்றால் என்ன? ஸதக்கா என்றால் என்ன? ஹத்யா என்றால் என்ன? போன்ற விபரங்களைப் புரிந்து கொள்வதில்லை. உறவினர்களில் ஏழைகளாக இருப்போர் தங்கள் உறவினர்களில் செல்வந்தர்களாக இருப்போரிடமிருந்து ஸதக்காவை பெற்றுக் கொள்ள பின் வாங்குகின்றனர். இழிவாகவும் கருதுகின்றனர். அதே ஸதக்காவை அடுத்தவரிடம் பெற்றுக் கொள்ளத் தயங்குவதில்லை. அதனை பெருமையாகவும் கொள்கின்றனர் மார்க்கச் சட்டம் என்னவென்று புரியாமலிருப்பது சுயமரியாதை என்னவெனத் தெரியாமலிருப்பதுவே காரணம். ஆகவே உள்ளூரிலுள்ள உலமாக்களிடம் சிறந்த ஷரீஅத் சட்டங்களை கேட்டுத் தெரிந்து கொள்வார்களாக.

அல் இஹ்ஸான் இலல் ஜீரான்.

அண்டை வீட்டாருக்கு உதவி புரிதல்.

– கால தஆலா வஃபுதுல்லாஹ வலா துஷ்ரிகூ



பிஹி ஷைஆ வபில்வாலிதைனி இஹ்ஸானா வபிதில் குக்பா வல்எதாமா வல்மஸாகீன வல்ஜாரி தில்குர்பா வல்ஜாரில் ஜன்பி

அல்லாஹ்வை நீங்கள் வணங்குங்கள் அவனுக்கு எதையும் இணை வைக்காதீர்கள். "பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும் அடுத்த அண்டை வீட்டாருக்கும் உபகாரம் செய்யுங்கள் என்று" இறைவன் தனது திருமறையில் கூறியுள்ளான்.

கால ஸல்–அம் மாஜால ஜிப்ரஈலு யூஷீனி பில்ஜார்ரீ ஹத்தா கஷீத்து அய்ன் யூரிதஹு

அண்டை வீட்டாரைக் குறித்து ஜிப்ரயீல் (அலை) அவர்கள் எனக்கு அறிவுரை கூறிக்கொண்டேயிருந்தார்கள் அவ்வண்டைவீட்டாருக்கு வாரிசு பாத்தியதையை ஏற்படுத்தி விடுவாரோ என்று நான் அஞ்சிவிட்டேன் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வகால ஸல்–அம் மன் கான யுஃமினு பில்லாஹி வல்யவ்மில் ஆகிரி பல் யக்ரிம் ஜாரஹு

அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிப்போர் அண்டை வீட்டாரை கண்ணியப்படுத்துவாராக என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வகால ஸல்-அம் மன் அதா ஜாரஹு பகத் அதானீ பகத் அதல்லாஹ

தம்முடைய அண்டை வீட்டாரை துன்புறுத்தியவர் என்னைத்துன்புறுத்தியவராவார். என்னைத் துன்புறுத்தியவர் இறைவனைத் துன்புறுத்தியவர் ஆவார் என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கால் ஸல்–அம் வல்லாஹி லா யுஃமினு மன் லம் யஃமனு ஜாரஹு பிவாதிகிஹ்

ஒருவர் தன்னால் தனது அண்டை வீட்டார் அச்ச மற்றவராக இல்லாதிருப்பின் அவர் விசுவாசங் கொண்ட வராக மாட்டார் என்று திரு நபி(ஸல்)அவர்கள் இறைவன் மீது பிரமாணம் செய்து கூறியிருக்கிறார்கள்.

குறிப்பு:-

உண்மையான முஸ்லிமாயிருந்தால் அவர்கள் எவ்விதத்திலும் அண்டை வீட்டாருக்கு இடையூறு செய்ய மாட்டார். தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றினாலும் அண்டை வீட்டாருக்கு இடையூறு செய்பவராயிருந்தால் முழுமையான முஸ்லிமாக இருக்க-மாட்டார் என்பது இந்த ஹதீதின் கருத்து. அண்டை வீட்டாருக்கு மகத்தான உரிமைகள் இருக்கின்றன. அவர்களுக்கு உதவுபவர்களாகவும் நம்பிக்கைக்குரியவர்-களாகவும் இருப்பது சன்மார்க்க விஷயத்தில் மிக முக்கியமான ஒன்று அண்டை வீட்டினருக்கு எத்துன்பமும் நம்மால் ஏற்படலாகாது என்ற உணர்வு நம்மில் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும், உணர்வு மட்டும் போதாது அது செயலிலும் இருத்தல் வேண்டும், இது முதற் கடமை. பின்னர், அவருக்கு சொல்லாலோ, உடலாலோ, இயன்றவரை உதவிகள் செய்யவேண்டும். இவ்வாறு செய்தால் அண்டை வீட்டாருக்கு நம் மீது அன்பும், நல்லெண்ணமும் ஏற்படும். பரஸ்பரம் உதவியும், ஒத்துழைப்பும் ஏற்படும் இவ்வாறு ஒவ்வொருவரும் இருப்பாராயின் நாட்டில் சகோதரத்துவம், அமைதி, சுபிட்சம் ஆகியவை தானாகவே ஏற்பட்டு விடும். முற்காலத்துப் பெரியார்களில் இந்தப்பண்பு அநேகம் இருந்தது ஆதலால், அக்காலத்தில் எவரும் அவர்களை



வெல்லமுடியவில்லை யாவரும் இன்புற்றிருந்தனர் இப்பண்பு நம்மிடம் குறையத் தொடங்கியதிலிருந்து அவர்களுடைய ஆட்சிக்கும் மாட்சிக்கும் பங்கமேற்பட்டு இறுதியாக அரசியல் அதிகாரமும்பறிபோனது இன்றோ நமக்கு அரசியல் சுதந்திரமும் பறி போகும் நிலை. எல்லாம் வல்ல இறைவன் நமக்கு நேர் வழி காட்டுவானாக ஆமீன்.

அண்டை வீட்டாரின் உரிமைகள்பற்றி இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் தங்களது ''இஹ்யா''வில் ஒரு ஹதீதைக் குறிப்பிட்டுள்ளார்கள். அது வருமாறு கால ஸல்–அம் அ தத்ரூன மா ஹக்குல் ஜாரி இனிஸ்தஆன பிக அஃனத்ஹு வஇனிஸ்தக்ரழ பிக அக்ரழ்தஹு வஇனிஃப்தகர்ர ஜத்தத் அலைஹி வஇன் மரழ அத்தத்ஹு வஇன் மாத தப்அத் ஜனாஜதஹு வஇன் அஷாபஹு கைருன் ஹனஅத்ஹு வஇன் அஷாபத்ஹு முஷீபதுன் அஜபத்ஹு வலா தஸ்ததில்லு அலைஹி பில்பனாஇ பதஹஜ்ஜப அன் ஹுர்ரீஹு இல்லா பிஇத்னிஹி வலா–தவத்ஹு வஇனிஷ்தரைத பாகிஹதுன் பஹ்த்லஹு பஇன்லம் தப்ஃஅல் பத்குல் ஸிர்ரன் வலாஎக்ருஜு பிஹா வலதுக லிஎகீழ பிஹா வலதுஹு வலா தவத்துஹு பிகிதாரி குத்ரிக இல்லா அன்தஃரிப லஹு மின்ஹா அதத்ரூன மா ஹக்குல் ஜாரி வல்லதீ நஃப்ஸீபியதிஹி லா யப்லுகு ஹக்குல் ஜாரி இல்லா மன் ரஹிமஹுல்லாஹு

அண்டை வீட்டாரின் உரிமைகள் யாவை என்பதை நீங்கள்அறிவீர்களா? உம்மிடத்தில் அவர் உதவி கோரினால் அவருக்கு நீர் உதவி புரிய வேண்டும் உம்மிடத்தில் அவர் கடன் கேட்டால் நீர் அவருக்கு கடன் கேட்டால் நீர் அவருக்கு கடன் கொடுக்க வேண்டும். அவர் தேவையுள்ளவரானால் அவருக்கு நீர் தாரளமாக கொடுக்க வேண்டும். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவரைப்-போய் பார்க்க வேண்டும். அவர் மரித்தால் அவருடைய சவஅடக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும். அவருக்கு நலம் கிடைத்தால் அவரை நீர் வாழ்த்த வேண்டும். அவருக்கு துன்பம் ஏற்பட்டால் அவருக்கு அனுதாபம் காட்ட வேண்டும் அவருடைய அனுமதியின்றி அவருக்குக் காற்றோட்டம் வராமல் தடுக்கக்கூடிய விதமாக நீர் கட்டிடத்தை உயர்த்தக்கூடாது. அவருக்கு நீர் இடையூறு செய்யலாகாது. பழங்களை வாங்கினால் அவருக்கும் அதிலிருந்து நீர் அன்பளிப்பு வழ்ங்க வேண்டும். அவ்வாறு கொடுக்க இயலாதெனில் அவைகளை மறைத்து உமது வீட்டினுள் கொண்டு வர வேண்டும். அவருடை பிள்ளையுடன் உமது பிள்ளை சண்டையிடுமாறு விடக்கூடாது உன்னுடைய சமையலிலிருந்து அவருக்கு கிடைக்குமாறு செய்ய வேண்டும். (குழம்பு போன்ற பதார்த்தங்களை ஒருவருக்-கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டும். அண்டை வீட்டாருடைய உரிமை யாவை என்பதை நீங்கள் அறிவீர்களா? இறைவன் யாருக்கு கிருபை செய்தானோ அவரைத் தவிர வேறு யாரும் அவைகளை பூரணமாக நிறைவேற்ற இயலாது என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் ஆகவே அண்டை வீட்டாருடன் உறவாக இருக்க வேண்டிய முறைபற்றி இந்த ஹதீதில் கூறியுள்ளதை பார்க்கினும் அதிகமாகக் கூறவேண்டிய அவசியமில்லை.



## அல்இஹ்ஸான் பில்அஸ்ஹாப்

## தோழர்களுக்கு உபகாரம்

வருவிய ஸல் —அம் காலமாமின் ஸாஹிபின் யஷ்ஹபு ஸாஹிபன் வலவ் ஸாஅதன்மின் நஹாரில் அஸ் அலதி அன் சுஹ்பதிஹி யவ்மல் கியாமதி ஹல் அகாம பிஹா ஹக்குல்லாஹி அவ் இழாஅஹு

பகலில் சிறிது நேரம் தான் ஒருவரை ஒருவர் நட்பு கொள்கிறார். இறுதிநாளில் இதனைக் குறித்து அல்லாஹ்வின் உரிமையை அவர் நிலைநிறுத்தினாரா அல்லது அதனை வீணாக்கினாரா என்று வினவப்படுவார். என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

குறிப்பு:-

ஒருவரை ஒருவர் நேசித்து நட்பு கொண்டால் அது இறைவனின் வழிபாட்டை அடிப்படையாகக்கொண்டிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சன்மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆதரவாகவும் நினைவு கூறுவதாகவும் இருக்க வேண்டும் உனது நண்பனுக்கு சன்மார்க்கக் கடமைகளை நினைவுபடுத்தினீரா? அவர் அவைகளை நிறைவேற்றினாரா? என்று ஒவ்வொரு நண்பரிடமும் வினவப்படும் என்ற அறவுரை இந்த ஹதீதில் கூறப்பட்டிருக்கிறது.

வகால ஸல்-- அம் கைருல் அஸ்ஹாபி கைருஹும் லிஸாஹிபிஹி வகைருல் ஜீரானி கைருஹும் லிஜாரிஹி

நண்பர்களில் சிறந்தவர் தம் நண்பர்களுக்கு நலவு செய்பவர், நல்ல அண்டை வீட்டார் தன் அண்டை வீட்டாருக்கு நல்லது செய்பவர் என திரு நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்

வகால ஸல்—அம் மா தஹாபு இத்னானி இல்லா கான அஹப்பஹுமா இலல்லாஹி அஸத்தஹுமா ஹுப்பன் லிஸாஹிபிஹி வபீ ரிவாயத்தின் இர்பரிக்—ஹுமா லிஸாஹிபிஹி

இருவர் ஒருவரோடொருவர் நட்பு கொண்டால் தன் நண்பருக்கு இவர்களில் எவர் அதிக அன்பு வைக்கிறாரோ அவர் மீது இறைவனுக்கும் அதிக அன்பு ஏற்பட்டு விடுகிறது. மற்றொரு ரிவாயத்தில் இவ்விருவரில் எவர் தன் தோழர் பால் அதிக அன்பு வைத்திருகிறாரோ அவர்பால் இறைவனுக்கு அதிக அன்பு ஏற்பட்டுவிடுகிறது என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

நட்புக்கொள்வதற்கு அடிப்படை மெய்யான அன்பு மாசற்ற அபிமானம். தன்னலங்கருதாமல் இறைவனுக்—காகவே நட்பு ஏற்படுமாயின் அதற்குரிய நன்மைப்பயன் இறைவனிடம் மிக மகத்தானது.

கால ஸல்—அம் காலத்ஆலா வஜபத் முஹப்பத்தீ லில்முதஹாப்பைனி பிய்யி வல்முதஜாலிஸைனி பிய்யி வல்முதஜாவிரைனி பிய்யி வல்முதபாதிலீனி பிய்யி.

எனக்காக ஒருவரை ஒருவர் நேசிப்போருக்கும் எனக்காக ஒருவருக்கொருவர் அருகில் அமருவோருக்கும். எனக்காக ஒருவரை ஒருவர் சந்திப்போருக்கும் எனக்காக ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக்கொள்வோருக்கும் என்னுடைய அபிமானம் கடமையாகிவிட்டது. என இறைவன் கூறியதாக திரு நபி (ஸல்) அவர்கள் கூறிகிறர்பருக்ருகள்.



வகால ஸல்—அம் எகூலுல்லாஹு தஆலா யவ்மல் கியாமதி அய்னல் முதஹாப்பூன பிஜலாலில் யவ்மி அழில்லுஹும் பீ லிழ்ழீ யவ்மின் லாழிழ்ழ இல்லா ழிழ்ழீ

ஒருவரை ஒருவர் (உள்ளப்பூர்வமாக) நேசித்தவர்கள் எங்கே இருக்கிறார்கள். என்னுடைய மகத்துவத்தின் மீது பிரமாணமாக என்னுடைய நிழலைத்தவிர்த்து (வேறு) நிழல் இல்லாத நாளாகிய இன்றைய தின (கியாம)த்தில் அவர்களுக்கு நான் நிழலிடுகிறேன் என்று இறைவன் கூறினான் என திரு நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

வகால ஸல்—அம் மன் ஸர்ரஹு அய்ன யஜித ஹலாவதல் ஈமானி பல்யஜிபுல் மர்உ லா யுஹிப்புஹு இல்லல்லாஹ்,

இறைநம்பிக்கையின் இனிமையை அடைவதைக் குறித்து மகிழ்பவர் இறைவனுக்காகவே நேசிக்கிறேன் என்ற உறுதியுடன் நண்பரை நேசிக்க வேண்டும் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஒருவர் மற்றொருவரை நேசித்து அவர் செய்யும் நற்செயல்களைப் போல் இவரும் செய்தால் அது இறைவனுக்காக நட்பு கொண்டதாகும். ஒருவர் மற்றொருவரை நேசிக்கிறார். அதன் பயனாக அவர் புரியும் தீய செயல்களிலும் பாபங்களிலும் அவருக்கு இவர் உதவி செய்வாராயின் அந்நட்பு இறைவனுக்காக ஏற்பட்ட நட்பல்ல இவ்வாறான நட்பு வெறுக்கத்தக்கது இது தகாக நட்பாகும். இறுதியில் இது பகைமையையே ஏற்படுத்தும். மறுமைப்பயனும் கிட்டாது. ஆதலால் நல்லோரிடம் நட்பு கொண்டு அவரிடமே நட்புடன் இருப்பது இம்மை

மறுமை இரண்டிலுமே நன்மைப் பயனை ஏற்படுத்தும் தனித்திருப்பதை விட நல்லோருடன் இருப்பது சிறந்தது. தீயோருடன் இருப்பதை விட தனித்திருப்பது சிறந்தது. தீயோருடன் சேர்ந்து இருப்பது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். தீயோர் நட்பு விரைவில் இல்லாவிடினும் தாமதித்தேனும் நல்லோரைத் தீயவழியில் சேர்த்து விடும். நல்லோருடன் நட்பு கொள்வது என்றாவது ஒரு நாள் நம்மையும் நல்லோராக்கி விடும். ஒருவரை நல்லவரா கெட்டவரா என்பதை அறிய வேண்டுமாயின் அவரைப்பற்றி பிறரிடம் விசாரிக்க வேண்டியதில்லை. அவருடைய நண்பர் யார் என்பதை தெரிந்தால் போதுமானது.

ஒருவருடன் நட்பு கொள்ள விரும்பினால் அவருடன் நட்பு கொள்வதற்கு முன் விருப்பு வெறுப்பின்றி அவருடைய நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்து அவரிடம் நற்பண்புகள் இருப்பதாக தெரிந்த பின்னரே நட்பு கொள்ள வேண்டும். ஒருவரை நண்பராக்கிக் கொள்ள விரும்பினால் அறிவுக்கூர்மை நற்குணம் நன்னடத்தை உலகாதயத்தில் பற்றின்மை பொய்யாமை ஆகிய ஐந்து தன்மைகள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டுமென இமாம் கஜ்ஜாலி (ரஹ்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இத்தன்மைகள் இருக்கும் ஒருவரிடத்தில் நட்பு கொண்டால் குற்றமில்லை. மேலும் இந்நட்பு தொடர்ந்து விட்டால் அந்நட்புக்கு சில கடமைகள் ஏற்பட்டு விடுகின்றன. அக்கடமைகளை அவசியம் நீர் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு நிறைவேற்றாவிடில் அது உண்மையான நட்பல்ல. அதுபோலித்தனம் அக்கடமைகளில் சில:-



நீ விரும்புவதையே உன் நண்பனுக்கும் விரும்ப வேண்டும். நீ வெறுப்பதையே உன் நண்பனுக்கும் வெறுக்க வேண்டும். உன் நண்பனின் அலுவல்களைச் செய்யும் பொழுது உன் சொந்த அலுவல்கள் போன்று செய்ய வேண்டும். இயன்றமட்டும் நண்பனின் திருப்தியைப் பெற முயல வேண்டும்.

உன் நண்பன் முன்னும் அவர் இல்லாதிருக்கும் போதும் அவர் மரணத்திற்குப் பின்னும் அவரைப் பேணிக்காக்க வேண்டும்.

உன் நண்பரின் மரணத்திற்குப் பின்னும் அவரது மனைவி மக்கள் உறவினர்களுடன் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

நண்பருக்கு பொருளுதவி தேவைப்படும் போது அவ்வுதவியை அவருக்குச் செய்ய வேண்டும். உன் நன்மையை விட அவருடைய நன்மையை முதலாவதாக கருத வேண்டும்.

உன் சகோதரன் உனக்குப் பிரியமானவனா? உன் நண்பன் உனக்குப் பிரியமானவனா? என முற்காலத்தில் வாழ்ந்த ஒருவரிடம் வினவப்பட்டது. உதிரத்தால் சகோதரராக இருப்பவரை நான் நேசிப்பதெல்லாம் அவர் நண்பராக இருந்ததாலே என விடையளித்தார்.

ஒருவர் தன்னுடைய சகோதரரது பாக்கெட்டில்கையை நுழைத்து தனக்கு தேவையானதை எடுத்துக் கொள்வதை நீர் அனுமதிப்பாயா என ஒருவரிடம் வினவப்பட்டது அதற்கவர் இல்லை என விடையளித்தார் அவ்வாறாயின் நீங்கள் சகோதரர்களல்ல எனக் கூறினார். இந்நிலை முற்காலத்தில் இருந்தது. இப்போது இல்லை.

நண்பர் மரித்து விட்டால் அவருடைய மனைவி மக்களுக்குத் தேவையானவைகளை அக்காலத்தில் வாழ்ந்தோர் நிறைவேற்றினர். மரித்தவரது முகத்தைத் தான் அவரது மனைவி மக்கள் பார்க்க இயலவில்லையே தவிர மற்றைய எல்லா அலுவல்களும் நண்பர்களால் குறைவற நிறைவேற்றப்பட்டது.

இக்காலத்தில் நட்பு என்பதெல்லாம் வெறும் வார்த்தைகளால் மட்டுமே! உண்மையான நட்பல்ல

கால ஸல்-அம் ஹக்குல் முஸ்லிமி அலல் முஸ்லிமி ஸித்துன் பகீல மா ஹிய யாரசூலல்லாஹ் கால இதா லகீதஹு பஸல்லிம் அலைஹி வஇதா தஆக பஅஜிப்ஹு வஇதஸ்தன்ஸஹக பன்ஸஹ் லஹு வஇதா அதஷ பஹமிதல்லாஹு பஷம்மத்ஹு வஇதா மரழ பஇத்ஹு வஇதா மாத பத்பஉஹு

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் ஆறு என திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அவை யாவை என ஸஹாபாக்களால் வினவப்பட்டது. அவரை நீர் சந்தித்தால் ஸலாம் சொல்ல வேண்டும். உன்னை அவர் அழைத்தால் பதிலளிக்க வேண்டும் உன்னிடத்தில் அறிவுரை கோரினால் அவருக்கு அறிவுரை வழங்க வேண்டும். அவர் தும்மி (அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி)னால் யர்ஹமுகல்லாஹ் (இறைவன் உனக்குக் கிருபை செய்வனாக) என்று கூற வேண்டும். அவர் மரணமடைந்தால் அவரை அடக்கம் செய்யச் செல்ல வேண்டும் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.



(நஸீஹத்து என்ற பதத்திற்கு உள்ளப்பூர்வமாக இருத்தல், சுயநலமின்றி நன்மையை நாடுதல் அறிவுரை வழங்கல் போன்ற பல பொருள்கள் இருக்கின்றன. இந்த ஹதீதில் அறிவுரை வழங்கள் என்ற பொருள் அளிக்கப் பட்டிருக்கிறது. இதர பொருள்களும் ஏற்புடையதே)

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிமின் பால் இருக்க வேண்டிய உரிமைகள்:-

சன்மார்க்க விஷயங்களில் உள்ளப் பூர்வமாக இருக்க வேண்டும்.

நற்செயல்களிலும் தக்வாவி (இறையச்சத்தி)லும் ஒருவருக் கொருவர் உதவியுடன் இருக்க வேண்டும்.

இறைவனுக்கு வழிபட வேண்டிய விஷயங்களில் ஒருவருக்கொருவர் நினைவுபடுத்துபவராயிருக்க வேண்டும். ஒருவரிடம் குறையிருந்தால் பிறருக்கு அக்குறைகளை தெரிவிக்காமல் அவரிடம் அக்குறைகளை தனிமையில் கூற வேண்டும்.

அவருடைய சிரமம் தீர உழைக்க வேண்டும்.
அவரை அற்பமாகஎண்ணக்கூடாது, இழிவுபடுத்தக்கூடாது,

பரிகசிக்கக்கூடாது, கிண்டல் செய்யக்கூடாது.

முஸ்லிம்களுக்கு விரோதமாக வேறு யாரையும் தூண்டிவிடக் கூடாது.

பொறாமை கொள்ளக்கூடது. உள்பகை வைக்கக் கூடாது. கெட்ட எண்ணம் கொள்ளலாகாது. அவருடைய சிரமங்கள் தீர உதவி புரிய வேண்டும்.

கால ஸல்அம் லாயுஃமினு அஹதுகும் ஹத்தா யுஹிப்பு லிஅகிகீஹி மா யுஹிப்பு லிநப்ஃஸிஹி.

தனக்கு எதை விரும்புகிறாரோ அதனையே தன் சகோதரனுக்கும் விரும்பாதவரையில் உங்களில் எவரும் (பரிபூரண) விசுவாசங் கொண்டவராகமாட்டார் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கால ஸல் அம் அல் முஸ்லிமு லில்முஸ்லிமி கல்புன்யாத் எஷுத்து பஃலுஹு பஃலன்

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு ஒன்றுக் கொன்று ஆதரவாயிருக்கிற கட்டிடத்தைப் போன்றிருக்கிறார் என்றுதிரு நபி ஸல் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

கால ஸல்அம் மன் லம் எஹ்தம்மு பி அம்ரில் முஸ்லிமீன பலைஸ மின்ஹும்

முஸ்லிம்களின் விஷயத்தில் சிரத்தை கொள்ளாதவர் முஸ்லிம்களைச் சார்ந்தவரல்ல என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

(முஸ்லிம்களின் விஷயம் என்பது முஸ்லிம்களின் தனிப்பட்ட விஷயங்களையும் ஸ்தல முஸ்லிம்களின் பொது விஷயங்களையும் குறிக்கும். இவ்விரு வகை விஷயங்களின் தனிநபரின் விஷயங்களின் உதவிபுரிவது அவர் இஸ்லாமிய சகோதரன் என்ற வகையில் செய்யும் உதவியாகும் ஸ்தல முஸ்லிம்களின் பொது விஷயங்களில் ஏனைய முஸ்லிம்களின் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு இயன்றவரை ஒத்துழைக்க வேண்டும். இவ்விஷயங்களில் அக்கறை கொள்ளாமலும் ஒத்துழைக்காமலும் ஒதுங்கி இருப்பதுசமூகக்கட்டுப்பாட்டை குலைப்பதற்கும் சமூகத்தில் பிளவேற்படுத்துவதற்கும் சமூகத்தின் பலத்தைக் குறைப்பதற்கும் வழிவகுப்பதாக அமைந்து விடும்.)



கால ஸல்அம் லைஸ மின்னா மன் லம் யர்ஹம் ஸகீரனா வலம் யூகிர் கபீரனா

நம்மவரின் சிறுவ(இளைஞ)ர்களுக்கு கருணை காட்டாதவரும், நம்மவரின் முதியோருக்கு மரியாதை செய்யாதவரும் நம்மைச் சார்ந்தவரல்லர் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

சிறுவ (இளைஞ)ர்கள் அனுபவின்மையால் பல தவறுகள் செய்யக்கூடும். ஆதலால், அவர்களின் தவறுகளை மன்னித்து தவறுகளைப் புரியச் செய்ய வேண்டும். முதியோர் மூப்பு காரணமாக நினைவாற்றல் இல்லாமலிருப்பது இயற்கை, ஆதலால், அவர்களின் வயதுக்கு மதிப்பளித்து, அவர்களின் செய்கைகளை பொருட்படுத்தாமல் அவர்களிடம் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும்.)

வகால ஸல்–அம் உன் ஷுர் அகாக ளாலிமன் அவ் மள்லூமன் பகால ரஜுலுன் நன்ஷுரு இதா கான மள்லூமன் பகைஃப நன்ஷுருஹு ளாலிமன் கால ஸல்–அம் தம்னஉஹு மினல்லுல்மி பதாலிக நுஷ்ரதுன் லஹு

உன் சகோதரருக்கு அநியாயக்காரனாகவோ அநியாயஞ் செய்யப்பட்டவனாகவோ இருப்பினும் உதவி புரிதல் வேண்டும். அப்பொழுது ஒருவர் அவர் அநியாயஞ் செய்யப்பட்டவராக இருக்கையில் நாங்கள் உதவி புரிவோம். அவர் அநியாயம் செய்பவராக இருக்கையில் எப்படி நாங்கள் உதவி செய்ய வேண்டும் என்று வினவினார் அநியாயம்செய்வதை விட்டும் அவரை நீ விலக்க வேண்டும் இதுதான் அவருக்கு நீ உதவி செய்தல் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

வகால ஸல்அம் லா துஹாஸிதூ வலா தனாஜஷு வலா தபாகலூ வலா ததாபீரு வலா பீஉ ப:.லுகும் அலா பீஇன் ப:.லுன் வகூனூ இபாதல்லாஹி இக்வானல் முஸ்லிமி அகுல் முஸ்லிமி லா எல்லிமுஹூ வலா யக்த் லஹூ வலா யஹ்கிருஹூ வலா யுகத்திபுஹூத் தக்வா ஹாஹுனா வ யஷீரு பி யதிஹி இலா ஸத்ரிஹி தலாத மர்ராதின் பிஹஸ்பி இம்ரஇம் மினஷ்ஷர்ரி அய்ன் யஹ்கிர அகாஹுல் முஸ்லிமி குல்லுல் முஸ்லிமி அலல் முஸ்லிமி ஹராமு தமிஹி வமாலிஹி வ இர்ழிஹி.

பொறாமை கொள்ளாதீர்கள். சச்சரவு செய்யாதீர்கள் ஒருவருக்கொருவர் பகைமை கொள்ளாதீர்கள். ஒருவரை ஒருவர் மறைவாக குறை கூறா (புறம்பேசா) தீர்கள். ஒருவர் விலை பேசிக் கொண்டிருக்கும் போது அதற்கு போட்டியாக விலை பேசாதீர்கள். அல்லாஹ்வின் அடியார்களே. சகோதரர்களாக இருங்கள் ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் சகோதரர் அவருக்கு அநியாயம் செய்ய லாகாது அவரை இழிவு படுத்தலாகாது. அவரை கேவலப் படுத்தலாகாது, அவரைப் பொய்ப்பிக்கலாகாது, தக்வா என்னும் பயபக்தி இங்குதான் தங்களின் நெஞ்சில் மும்முறை தம்கரத்தால் சுட்டிக் காட்டினார்கள், மனிதன் தீமை செய்வதாகக் கருதப்படுவதற்கு அவர் தன்னுடைய முஸ்லிம் சகோதரரை கேவலப்படுத்துவது போதுமானது. ஒவ்வொரு முஸ்லிமும் இன்னொரு முஸ்லிமின் மீது அவருடைய உதிரம் அவருடைய பொருள் அவருடைய கௌரவம் ஹராமாகும். (அதாவது முஸ்லிமைக் கொலை செய்தல், காயப்படுத்தல் பொருளை அபகரித்தல், மான நஷ்டம் விளைவித்தல் ஆகியவை தடுக்கப்பட்டிருக்கின்றன).



வகால ஸல்—அம் மன் ந:.பஸ அன்மு:.மினின் கருபத் மின் கருபித்துன்யா ந:.பஸல்லாஹு அன்ஹு கருபத் மின் கரிபி யவ்மல் கியாமதி வமன் யஸ்ஸிர் அலா ம:.ஷிரி எஸ்ஸரல்லாஹு அலைஹி பித்துன்யா வல் ஆகிரதி வமன் ஸதர முஸ்லிமன் ஸதர ஹுல்லாஹு பித்துன்யா வல்ஆகிரா வல்லாஹு பீ அவ்னில் அப்திமா கானல் அப்துபீ அவ்னி அகீஹி

இவ்வுலகத்தைய துயரங்களில் ஒரு துயரத்தை ஒரு முஸ்லிமுக்குத் துடைப்பவருக்கு இறுதி நாளின் துயரங்களில் ஒரு துயரைத்துடைப்பான். கஷ்டப் படுவோருக்கு நிவாரணமளிப்பவருக்கு இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹுத்தஆலா நிவாரணமளிப்பான் முஸ்லிமுடைய குறையை மறைப்பவருக்கு இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹுத்தஆலா அவர் குறையை மறைப்பான். அடியான் தன் சகோதரனுக்கு உதவி செய்து கொண்டிருக்குங்காலமெல்லாம் அல்லாஹுத்தஆலா அவ்வடியானுக்கு உதவிக்கொண்டே இருப்பான். (அல்ஹதீது).

வகால ஸல்—அம் மன் கான பீ ஹாஜத்தி அகீஹி கானல்லாஹு பீ ஹாஜதிஹி வல்லாஹு யகூலுல் ஹக்கி வஹுவ எஹ்திஸ்ஸபீல்.

தன் சகோதரனின் தேவையை நிறைவேற்ற முயலுப வருடைய தேவையை இறைவன் நிறைவேற்றுவதி-லிருப்பான் இறைவன் உண்மையை உரைக்கிறான். அவனே நேர்வழியிற் சேர்க்கிறான் என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

(மேலே எழுதப்பட்டுள்ள திரு நபி (ஸல்) அவர்களின் ஹதீதுகள் விளக்கங்கள் கூறுவதற்கு அவசியமில்லாத முறையில் தெளிவாக இருக்கின்றன. குறிப்பிட்ட ஒரு வர்க்கத்திற்கு மட்டும் சொந்தமானவைகளல்ல. அக்காலத்தில் எத்தனையோ முனாபிக்குகள்(நயவஞ்சகர்கள்) உள்ளூர பகையை வைத்துக் கொண்டிருந்தவர்கள். தங்களை முஸ்லிம் என்னும் மூமின் (விசுவாசி) என்றும் வெளியில் சொல்லிக் கொண்டு முஸ்லிம் சமூகத்தினுள் இருந்து கொண்டு தந்திரமாகவும், வஞ்சகமாகவும் இஸ்லாமுக்கு விரோதமான வதந்திகளையம் பொய் செய்திகளையும் பரப்பி சதி நாசங்கள் செய்து கொண்டி-ருந்தனர். ஆதலால் உண்மையான மூஸ்லிம் மெய்யான விசுவாசி இவ்விதமாக இருக்க வேண்டும் என்று உபதேசித்ததுமின்றி இதற்கு மாறாக இருப்பவர் முழுமையான முஸ்லிமாக இருக்கவில்லை என்பதை ஏனைய முஸ்லிம்கள் உணர்ந்து கொள்ளச் செய்தார்கள் ஆகவே திருக்குர்ஆன் உலக மக்கள் யாவருக்கும் பொதுவான ஒரே வேத நூலாக இருப்பது போல் திரு நபி (ஸல்) அவர்களும் உலக மக்களுக்குரிய ஒரே பொது நபி. அவர்கள் கூறிய அறிவுரைகள் அனைத்தும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை. இவைகளை உலகமக்கள் கடைப் பிடித்தொழுகுவாராயின் உலகில் சமாதானம் சுபிட்சம் அமைதி தானாகவே ஏற்படும்.

எல்லாம் வல்ல இறைவன் நம் யாவரையும் நேர்வழியிற் சேர்த்து இவ்வறிவுரைகளைக் கடைப்பிடித்து இம்மை மறுமைப்பெற்றிகளை நாம் அடைய அருள் புரிவானாக ஆமீன். ஆமீன். யாறப்பல் ஆலமீன். வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.